தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 152 சித்திரை 27
Regd. No.CBE/090/2011-2013
கோவை, சனி, மே 10, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**எதிரிகளால் பேரிழப்பு: உலக வங்கியிடம் கூடுதல் கடன் கோரிய பாகிஸ்தான்**
...2-ம் பக்கம்

**போர்ப் பதற்றம் எதிரொலி: பொதுமக்களுக்கு மத்திய அரசு அறிவுரை**
...3-ம் பக்கம்

**எல்லையில் போர்ப்பதற்றம்: நடப்பு ஐ.பி.எல். போட்டிகள் ஒரு வாரத்துக்கு நிறுத்தம்**
...6-ம் பக்கம்



# அவசரகால முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மாநிலங்களுக்கு மத்திய அரசு கடிதம்

புதுடில்லி, மே 10-

**அவசரகால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அத்தியாவசிய பொருட்களை இருப்பு வைக்க மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.**

அவசரகால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநிலங்களுக்கு மத்திய அரசு கடிதம் அனுப்பியுள்ளது. மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுக்கு மத்திய உள்துறை சார்பில் அனுப்பப்பட்டுள்ள அந்த கடிதத்தில், பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

அவசரகால நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மருந்துகள், உணவு தானியங்கள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் இருப்பு வைக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூடாரம், வாகனங்கள், ஜெனரேட்டர் உள்ளிட்டவற்றை தயார் நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.







திருச்சி மாநகர் பஞ்சப்பூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.408.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், திருச்சி சிவா எம்.பி., மேயர் மு.அன்பழகன், மாவட்ட கலெக்டர் மா.பிரதீப்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## காஷ்மீரில் ஊடுருவல் முயற்சி முறியடிப்பு:

# 7 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், மே 10-

**ஜம்மு காஷ்மீரின் சம்பா செக்டாரில் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நடந்த பெரிய ஊடுருவல் முயற்சியை எல்லை பாதுகாப்புப் படையினர் முறியடித்துள்ளனர். இந்த முயற்சியில் 7 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக பிஎஸ்எஃப் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

இதுகுறித்து ஜம்மு பிஎஸ்எஃப் அதன் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “மே 8-ம் தேதி சுமார் 11 மணியளவில் ஜம்மு காஷ்மீரின் சம்பா பகுதியில் நடந்த மிகப்பெரிய ஊடுருவல் முயற்சியை எல்லை பாதுகாப்புப் படையினர் முறியடித்துள்ளனர்.” என்று தெரிவித்துள்ளது.

சம்பவம் குறித்து அதிகாரிகள் கூறுகையில், “பாகிஸ்தானின் தாண்டர் பகுதியில் இருந்து நடத்திய துப்பாக்கிச்சூட்டினை பயன்படுத்தி பெரிய குழு ஒன்று இந்தியாவுக்குள் ஊடுருவ முயற்சி செய்தது. என்றாலும் விழிப்புடன் இருந்த எல்லைப் பாதுகாப்புப் படையினர், மிகப்பெரிய இந்த ஊடுருவலை தடுத்தனர். குறைந்தது 7 பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்றனர். பாகிஸ்தான் தரப்புக்கு பெரும் சேதம் விளைவித்தனர். தொடர் கண்காணிப்புகளால் ஊடுருவல்காரர்களின் நடமாட்டம் கண்டறியப்பட்டது. உடனடியாக பி.எஸ்.எப். நடவடிக்கையில் ஈடுபட்டது.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்சி, பஞ்சப்பூரில் அதிநவீன வசதிகளுடன்

# ரூ.408.36 கோடியில் கலைஞர் கருணாநிதி பேருந்து முனையம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

திருச்சி, மே 10-

**திருச்சி மாவட்டம் பஞ்சப்பூரில் 40 ஏக்கரில் ரூ.408.36 கோடியில் அதிநவீன வசதிகளுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். அத்துடன், பஞ்சப்பூர் புதிய பேருந்து முனையம் முன்பு கருணாநிதி சிலையையும் அவர் திறந்து வைத்தார்.**

### பல்வேறு வசதிகள்...

திருச்சி மாவட்டம் பஞ்சப்பூரில் 40 ஏக்கரில் ரூ.408.36 கோடியில் அதிநவீன வசதிகளுடன் மின் தூக்கி, நகரும் படிகட்டு, ஏசி அறைகள் என பல்வேறு வசதிகளுடன் பேருந்து முனையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பேருந்து முனையத்தை திறந்து வைத்த முதல்வர், பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து வசதிகளையும் நேரில் பார்வையிட்டு அதிகாரிகளிடம் அது பற்றியும் கேட்டறிந்தார். இந்த பேருந்து நிலையம் ஒரு நாளைக்கு சுமார் 3,200 பேருந்துகளை கையாளும் திறன் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

### கருணாநிதி சிலை...

முன்னதாக 2 நாட்கள் அரசுப் பயணமாக தமிழக முதல்வர் ஸ்டாலின் திருச்சி சென்றார். நேற்று வெள்ளிக்கிழமை காலை விருந்தினர் மாளிகையிலிருந்து புறப்பட்டு திருச்சி மன்னார்புரம் நான்குரோடு சந்திப்பு, கிராப்பட்டி, எடமலைப்பட்டி புதூர் வழியாக பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள பஞ்சப்பூர் பேருந்து முனையத்திற்கு சென்றார். அங்கு 40 ஏக்கரில் ரூ.408.36 கோடியில் அதிநவீன வசதிகளுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். இதைத்தொடர்ந்து பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் கருணாநிதி சிலையை திறந்து வைத்தார். பிறகு முனையத்தின் முதல் தளத்தில் நகரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

### இலவச வீட்டுமனை....

பின்னர் அரசு விழாவில், 50 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். மேலும் ரூ.463.30 கோடி மதிப்பில் நிறைவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.276.95 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.830.35 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விழா பேருரை ஆற்றினார். அங்கு, புதிய பேருந்து முனையத்துக்கு அருகே பெரியார் சிலையை திறந்து வைத்தார். மேலும், ரூ.236 கோடி மதிப்பிலான ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டினார். பின்னர், ரூ.128.94 கோடியில் கட்டப்பட்டுள்ள அண்ணா கனரக சரக்கு வாகன முனையத்தை திறந்து வைத்து, பேரறிஞர் அண்ணாவின் உருவ சிலையை திறந்து வைத்தார்.

### அமைச்சர்கள் பங்கேற்பு...

விழாவில் திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் வரவேற்று பேசினார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் கார்த்திகேயன் திட்ட விளக்க உரை ஆற்றினார். விழாவிற்கு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை தாங்கி பேசினார். விழாவில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.

### தமிழ் இலக்கிய மாநாடு...

விழா முடிந்தவுடன் முதல்வர் அரசு விருந்தினர் மாளிகைக்கு சென்றார். பின்னர் சிறிது நேரம் ஓய்வுக்கு பின் மாலை 5 மணிக்கு புறப்பட்டு திருச்சி அடுத்த எம்.ஐ.இ.டி கல்லூரியில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய 9 -வது மாநாட்டில் கலந்துகொண்டு மாநாட்டை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். பிறகு நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு இரவு விமான மூலம் சென்னை திரும்பினார்.

## இந்திய ராணுவ வீரர்களுக்கு ஆதரவாக

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று பேரணி

சென்னை, மே 10-

**பாகிஸ்தானின் தீவிரவாதத் தாக்குதலுக்கு எதிராக வீரத்துடன் போர் நடத்தி வரும் இந்திய ராணுவத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக இன்று (மே.10) சென்னையில் தனது தலைமையில் பேரணி நடைபெறும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும் இந்த பேரணியில் பொதுமக்கள் - மாணவர்கள் பங்கேற்குமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.**

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகள் 26 பேர் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். கொடூரமான இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக புதன்கிழமை நள்ளிரவில் ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் பாகிஸ்தானின் 9 பயங்கரவாத முகாம்களை அழித்தது இந்திய ராணுவம்.

அதன் தொடர்ச்சியாக, இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டருகே உள்ள எல்லை கிராமங்களைக் குறி வைத்து பாகிஸ்தான் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தியாவின் 15 நகரங்களை குறிவைத்து வியாழக்கிழமை பாகிஸ்தான் மேற்கொண்ட வான்வழித் தாக்குதல் முயற்சிகளை இந்தியா முறியடித்தது. அதன் தொடர்ச்சியாக இரவிலும் பாகிஸ்தானின் ஏவுகணைகளையும், ட்ரோன்களையும் வெற்றிகரமாக வீழ்த்தியது இந்திய பாதுகாப்புப் படை. எல்லையோர மாநிலங்களில் தொடர்ந்து பதற்றமான சூழலே நிலவுகிறது.

இந்நிலையில் பாகிஸ்தானின் தீவிரவாதத் தாக்குதலுக்கு எதிராக வீரத்துடன் போர் நடத்தி வரும் இந்திய ராணுவத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக இன்று (மே.10) சென்னையில் தனது தலைமையில் பேரணி நடைபெறும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பில்,

“பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கும் தீவிரவாத தாக்குதல்களுக்கும் எதிராக வீரத்துடன் போர் நடத்தி வரும் இந்திய ராணுவத்துக்கு நமது ஒன்றுபட்ட ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது. அதனை வெளிப்படுத்தும் வகையில், ஒரு பேரணியை இன்று மாலை 5 மணிக்கு சென்னையிலுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து தனது தலைமையில் முன்னாள் படைவீரர்கள், அமைச்சர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்குபெறும் பேரணி நடைபெறும்.

இந்த பேரணி தீவுத்திடலில் அருகே உள்ள போர் நினைவுச்சின்னம் அருகில் நிறைவு பெறும்.

இந்த பேரணி, இந்திய ராணுவத்தின் வீரத்தையும் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் போற்றுவதற்கும், தேச ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டு மக்கள் இந்தப் பேரணியில் பங்கேற்று, நமது ராணுவத்துக்கு ஆதரவு தெரிவிக்குமாறு முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜம்மு-காஷ்மீரில் கல்வி பயிலும்

# தமிழக மாணவர்களை மீட்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை

## தொடர்புகொள்ள உதவி எண்கள் அறிவிப்பு

சென்னை, மே 10-

**ஜம்மு காஷ்மீரில் தற்போதைய நிலைமை சீரானவுடன் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பயின்று வரும் 52 தமிழக மாணவர்களை மீண்டும் தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. மேலும் உதவி எண்களையும் தமிழக அரசு அறிவித்துள்ளது.**

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கடந்த ஏப்.22-ம் தேதியன்று, ஜம்மு காஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பைசரான் பள்ளத்தாக்குப் பகுதியில் சுற்றுலாவிற்கு சென்றிருந்த பொதுமக்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் தமிழகத்தைச் சேர்ந்த சிலர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றது.

இதையடுத்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான தமிழகத்தைச் சேர்ந்தவர்களை பாதுகாக்கும் முகமாக அவர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு உதவி மையம் தொடங்க உத்தரவிட்டார்.

அதனடிப்படையில் உதவி மையம் தொடங்கப்பட்டு, 011-24193300 (Landline), 9289516712 (Mobile Number with Whatsapp) என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டது. 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் அமைக்கப்பட்டு, அவர்களின் தேவைகள் அறிந்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், தற்போது, தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், ஜம்மு காஷ்மீரில் படித்துவரும் தமிழகத்தைச் சார்ந்த 52 மாணவர்களின் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை பாதுகாப்பாக தமிழகத்துக்கு அழைத்துவர வேண்டும் என்று தமிழக முதல்வரிடம் வேண்டுகோள் வைத்துள்ளார்.

இந்த வேண்டுகோளுக்கு இனங்க, முதல்வரின் அறிவுறுத்தலின்பேரில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், ஆகியோர்
**(கடைசி பக்கம் பார்க்க)**

## இந்தியா-பாக். இடையே போர் சூழல்:

# பாதுகாப்பு வளையத்துக்குள் டெல்லி - தீவிர கண்காணிப்பு

புதுடெல்லி, மே 10-

**இந்தியா-பாகிஸ்தான் இடையேயான போர் சூழல் காரணமாக தலைநகர் டெல்லி பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் உயர் எச்சரிக்கை அறிவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.**

ஆபரேஷன் சிந்தூருக்குப் பிறகு, நேற்று முன்தினம் இரவு முழுவதும் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் பகுதிகளில் பாகிஸ்தான் இந்தியா மீது ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. அவற்றை இந்திய ராணுவம் வெற்றிகரமாக முறியடித்தது. தொடர்ந்து தாக்குதல்கள் நிகழ்ந்து வரும் சூழலில் வட மாநிலங்களில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த சூழலில், தலைநகர் டெல்லியில் உயர் எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கான விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அவசரநிலையைச் சமாளிக்க மருத்துவ மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளின் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. டெல்லி நகரின் வரலாற்று நினைவுச்சின்னங்களை சுற்றி போலீசார் பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளனர். செங்கோட்டை மற்றும் குதுப் மினார் போன்ற அடையாளச் சின்னங்களுக்கு அருகில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. காவல்துறையினர் மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளனர். பதட்டமான பகுதிகளில் கூடுதல் படைகளை நிறுத்துகிறோம். இரவில் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளோம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பதட்டங்களைத் தொடர்ந்து, நாட்டில் 24 விமான நிலையங்கள் ஏற்கனவே தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. மேலும், டெல்லிக்கு செல்லும் மற்றும் புறப்படும் பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இந்தியா கேட்டில் பகுதியில் மக்கள் நடமாட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## தேசிய கல்விக் கொள்கையை

# தமிழகத்தில் அமல்படுத்த கோரிய மனு சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி

புதுடெல்லி, மே 10-

**தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்த உத்தரவிட கோரிய மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது.**

தேசிய கல்விக் கொள்கைப்படி தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கத்தில் மும்மொழி கொள்கையை அமல்படுத்த உத்தரவிட வேண்டும் என பா.ஜ.க.வை சேர்ந்த வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஜெ.பி.பர்திவாலா தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, தேசிய கல்விக்கொள்கையை அமல்படுத்துமாறு தமிழ்நாடு, மேற்கு வங்கம் மற்றும் கேரள மாநில அரசுகளுக்கு உத்தரவிட முடியாது என தெரிவித்து மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது.


அத்துடன், மாநில அரசு, தேசிய கல்விக்கொள்கையை செயல்படுத்தாதது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் அல்ல எனவும் கருத்து தெரிவித்துள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -880.34 | -265.80 |
| பாயிண்ட் 79454.47 | பாயிண்ட் 24008.00 |



**தங்கம்**
1 சவரன் ₹72,120
1 கிராம் ₹9,015



**வெள்ளி**
1 கிலோ ₹11,000
1 கிராம் ₹110.00

**டாலர்** ₹85.31

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

### எதிரிகளால் எங்களுக்கு பேரிழப்பு:
# உலக வங்கியிடம் கூடுதல் கடன் கோரிய பாகிஸ்தான்

**பாகிஸ்தான், மே 10-**

உலக வங்கயிடம் இருந்து பாகிஸ்தான் அரசு கூடுதல் கடன் கோரியுள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் எதிரொலியாக வியாழக்கிழமை இரவு வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவின் எல்லையோர மாநிலங்களின் 15 ராணுவத் தளங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் ஏவிய ஏவுகணைகளை ரஷிய தயாரிப்பான 'எஸ்-400' வான் பாதுகாப்பு அமைப்பைக் கொண்டு சர்வ சாதாரணமாக இந்தியா முறியடித்தது.

இதற்கு பதிலடியாக பாகிஸ்தானில் உள்ள லாகூர், இஸ்லாமாபாத், கராச்சி,



சியால்கோட், பஹவல்பூர், பெஷாவர், குவெட்டா உள்ளிட்டப் பகுதிகளில் இந்திய ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த நிலையில், உலக வங்கியிடம் கூடுதல் கடன் விடுக்கக் கோரி பாகிஸ்தான் அரசு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக பாகிஸ்தானின் பொருளாதார விவகாரப் பிரிவு உலக வங்கியை டேக் செய்து வெளியிட்ட பதிவில், எதிரிகளால் பேரிழப்பு ஏற்பட்டுள்ளதால், சர்வதேச கூட்டாளிகளிடம் கூடுதல் கடனை பாகிஸ்தான் கோருகிறது. அதிகரித்து வரும் போர் மற்றும் பங்குச் சந்தை வீழ்ச்சிக்கு மத்தியில், சர்வதேச கூட்டாளிகள் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, பாகிஸ்தானின் பொருளாதார விவகாரப் பிரிவின் அதிகாரப்பூர்வ எக்ஸ் கணக்கு ஹேக் செய்யப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசின் உண்மை கண்டறியும் பிரிவு தெரிவித்துள்ளது.

## குஜராத் முதல்வருடன் பிரதமர் மோடி ஆலோசனை

**புதுடில்லி, மே 10-**

எல்லையில் அதிகரித்து வரும் பதட்டங்களுக்கு மத்தியில், தயார் நிலைகள் குறித்து குஜராத் முதல்வரிடம் பிரதமர் மோடி பேசினார்.

இது குறித்து குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: பிரதமர் மோடி என்னுடன் தொலைபேசியில் உரையாடி, எல்லையில் நிலவும் பதற்றம், தற்போதைய சூழ்நிலை, மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கை குறித்து கேட்டறிந்தார். பனஸ்கந்தா, படான், கட்ச் மற்றும் ஜாம்நகர் ஆகிய எல்லை மாவட்டங்களில் உள்ள குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். மக்களின் பாதுகாப்பிற்காக மாநில அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்க அறிவுரை வழங்கினார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 8 ஆயிரம் கணக்குகளை முடக்குங்கள்: எக்ஸ் தளத்திற்கு மத்திய அரசு உத்தரவு

**டெல்லி, மே 10-**

பாகிஸ்தான் மோதல் தொடர்பாக எக்ஸ் தளம் கணக்குகளை முடக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது.

இதைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியது. அந்த வகையில் ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் மீது பாகிஸ்தான் நேற்று முன்தினம் திடீர் ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டது. அதேவேளை, எல்லையில் இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கி சண்டை நீடித்து வருகிறது. இதனால், இரு தரப்புக்கும் இடையே கிட்டத்தட்ட போர் உருவாகியுள்ளது. இரு நாடுகளும் மோதலை தவிர்க்குமாறு பல்வேறு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. அதேவேளை, மோதல் தொடர்பாக எக்ஸ் சமூகவலைதளத்தில் பல்வேறு தகவல்கள் பரவி வருகின்றன. இதில் பெரும்பாலானவை போலி , தவறான தகவல்கள் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில், தவறான தகவல்கள் பரப்பும் 8 ஆயிரம் கணக்குகளை முடக்க எக்ஸ் தளத்திற்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. மத்திய அரசின் உத்தரவையடுத்து அந்த கணக்குகளை எக்ஸ் நிறுவனம் முடக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களை வழங்கினார்.

# இந்தியா - பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்ய மாட்டோம்
### துணை அதிபர் ஜெ.டி.வான்ஸ் தகவல்

**வாஷிங்டன், மே 10-**

இந்தியா - பாகிஸ்தான் போருக்கு இடையில் மத்தியஸ்தம் செய்ய மாட்டோம் என்று அமெரிக்க துணை அதிபர் ஜெ. டி. வான்ஸ் தெரிவித்திருக்கிறார்.

ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் எல்லைக் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள ராணுவ இலக்குகளை நோக்கி பாகிஸ்தான் படையினர் நேற்றிரவு தொடர் தாக்குதல் நடத்தினர். இதற்கு இந்திய ராணுவம் தரப்பில் தக்க பதிலடி தரப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இரு நாட்டு ராணுவமும் எல்லைப் பகுதிகளில் தீவிரமாகச் சண்டையிட்டு வருகின்றன.

இது குறித்து அமெரிக்காவில் செய்தியாளர்களுடன் அமெரிக்க துணை அதிபர் ஜெ. டி.வான்ஸ் பேசியதாவது: இந்த இரு நட்பு நாடுகளும் பதற்றத்தை தணிக்க அமெரிக்கா ஊக்குவிக்கிறது, ஆதரவளிக்கிறது. இதைத் தான் எங்களால் செய்ய முடியுமே தவிர, போருக்கிடையில் நாங்கள் தலையிடப் போவதில்லை. அதனை தேவையில்லாத செயலாகவே அமெரிக்கா கருதுகிறது. அதுமட்டுமில்லாது, இந்த சண்டையை கட்டுப்படுத்தும் வல்லமை அமெரிக்காவிடம் இல்லை" என்றார்.

## தங்கம் விலை குறைவு

**சென்னை, மே 10-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வெள்ளிக்கிழமை (மே. 9) பவுனுக்கு ரூ. 920 குறைந்து ரூ.72,120-க்கும் விற்பனையானது.

கடந்த சில நாள்களாக ஆபரணத் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கமாக இருந்து வந்தது. இந்த நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வெள்ளிக்கிழமை (மே. 9)கிராமுக்கு ரூ. 15 குறைந்து ரூ.9,015-க்கும், பவுனுக்கு ரூ. 920 குறைந்து ரூ.72,120-க்கும் விற்பனையானது. அதேநேரத்தில் வெள்ளி விலையில் எந்தவித மாற்றமின்றி வெள்ளி கிராம் ரூ.111-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 1,11,000-க்கும் விற்பனையாகிறது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

### தாக்குதல் முயற்சி முறியடிப்பு:
# பாதுகாப்பு படைகளுக்கு உமர் அப்துல்லா பாராட்டு

**ஸ்ரீநகர், மே 10-**

'பாகிஸ்தானின் ட்ரோன் தாக்குதல் முயற்சிகள் நமது படைகளால் முறியடிக்கப்பட்டன' என ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்தார்.

ஜம்மு முதல் ஜெய்சால்மர் வரையிலான எல்லைப் பகுதிகளில், பாகிஸ்தான் ட்ரோன்கள் , ராக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகளை வீசியது. பாகிஸ்தான் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தி, தாக்குதல் முயற்சியை முறியடித்தனர்.

இந்நிலையில் ஜம்முவில் முதல்வர் உமர் அப்துல்லா நேரில் சென்று ஆய்வு நடத்தினார். பாகிஸ்தான் ஏவுகணை தாக்குதலால் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து பேசினார்.

பின்னர் அவர், இந்தியா-பாகிஸ்தான் பதற்றம் குறித்து நிருபர்களுக்கு அளித்த பேட்டி: ஜம்முவில் பொதுமக்களை குறிவைத்து ட்ரோன்களைப் பயன்படுத்தி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. இருப்பினும், நமது இந்திய பாதுகாப்புப் படைகள் விரைவாகவும், திறமையாகவும் செயல்பட்டு சதி முயற்சியை முறியடித்தனர்.

இந்த சூழ்நிலைகள் இந்தியாவால் உருவாக்கப்படவில்லை. பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலே காரணம். அங்கு அப்பாவி மக்கள் குறிவைத்து கொல்லப்பட்டனர். எல்லையின் இருபுறமும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு உமர் அப்துல்லா கூறினார்.

## 10-05-2025



**இன்றைய ராசி பலன்கள்**

**மேஷம்:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். வியாபாரப் பயணங்களால் இலாபம் ஏற்படும். அழகிய பெண்களின் சிநேகமும், அழகான தனி வீடு அமையும். சுப காரியங்கள் நிறைவேறும்.

**ரிஷபம்:-** கௌரவக் குறைவு ஏற்படுத்தும் செயல்கள் தவிருங்கள். விபத்து ஏற்படாதிருக்க பயணத்தின் போது எச்சரிக்கை தேவை. மனஅமைதி பெற தியானம் செய்க.

**மிதுனம்:-** வியாபாரத்தில் ஏற்படும் இடைஞ்சல்களை தவிர்க்கப் பணியாளர்கள் ஒத்துழைப்புத் தேவை. தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**கடகம்:-** மனம் கோணாதபடி பணிவிடை செய்யும் மனைவியின் உதவி கிடைக்கும். பல வழிகளில் வருமானம் பெருக மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும். சகோதர நன்மை உண்டு.

**சிம்மம்:-** நல்ல வருமானம் வருவது போல் தோற்றமளிக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய முதலீடுகளை தவிர்கவும். பதவி அல்லது இட மாற்றங்கள் ஏற்படலாம்.

**கன்னி:-** எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு உண்டாகும். புத்தாடை அணிகலன்கள், வாசனைத் திரவியங்களும் சேரும். வாய்க்கு ருசியாக நல்லுறவுக்கு குறைவிருக்காது.

**துலாம்:-** பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். வீண் வம்புக்கு செல்லாதிருப்பது நல்லது. மாற்றங்கள் நிகழும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**விருச்சிகம்:-** – தனலாபமும், எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும். கல்வியில் வெற்றி கிடைக்கும். கௌரவம், மதிப்பு மரியாதை கூடும். பெண்களால் உதவியும் பிரிந்திருந்தவர் கூடியும் மகிழ்வர்.

**தனுசு:-** நினைத்த காரியங்கள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள், புதிய திருப்பங்கள் ஏற்படும். பிறருக்குக் கட்டளை இடும் படியான அதிகாரமுள்ள பதவிகள் கிடைக்கும்.

**மகரம்:-** தெய்வபக்தி மேலிட தெய்வீக காரியங்கள் ஈடேறும். எல்லாவற்றிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கும்பம்:-** எதிலும் நேர்மையாக நடக்க வேண்டிய நாள். தவறு செய்தால் தண்டிக்க படுவீர்கள். உயர்வு வரும்போது பணிவு வேண்டும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலம் ஏற்படும்

**மீனம்:-** பணவரவு உண்டு. தொழில் வளம் பெருகும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள். வரும் வாடிக்கையாளர்களின் மனம் அறிந்து செயல்பட்டால் வியாபாரம் பெருகும்.

# கலைஞர் நூலகம் நோக்கி வாரீர்: உதயநிதி ஸ்டாலின் அழைப்பு

**சென்னை, மே 10-**

புத்தகங்களின் வழியே உலகைப் படிக்க கலைஞர் நூலகம் நோக்கி வாரீர் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்கான 'கலைஞர் நூலகத்தை' தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திறந்து வைத்தோம்.

அமைந்தகரை சந்தை பகுதியில் அமைந்துள்ள இந்நூலகத்தை அண்ணாநகர் தொகுதியைச் சேர்ந்த பள்ளி - கல்லூரி மாணவர்கள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புத்தகங்களின் வழியே உலகைப் படிக்க கலைஞர் நூலகம் நோக்கி திரண்டு வாரீர். என தெரிவித்துள்ளார் .

### பாகிஸ்தானுக்கு நிதியுதவியா..?
# ஐ.எம்.எப். அமைப்பிற்கு இந்தியா வைத்த கோரிக்கை

**புதுடெல்லி, மே 10-**

பாகிஸ்தான் கடனுக்கு ஐ.எம்.எப். அமைப்பிற்கு இந்திய வைத்த கோரிக்கை வைத்துள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது. இதைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியது. அந்த வகையில் ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் மீது பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் திடீர் ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டது. இதனால், இரு தரப்புக்கும் இடையே கிட்டத்தட்ட போர் உருவாகி உள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு 1.3 பில்லியன் டாலர் கடனை ஐ.எம்.எப். வழங்க ஏற்கனவே திட்டமிட்டிருந்தது. இந்த கடன் பாகிஸ்தானின் பொருளாதார சீர்திருத்த திட்டங்களுக்கு ஆதரவாக வழங்கப்பட உள்ளது. இந்த கடனை வழங்குவது குறித்து ஐ.எம்.எப். அமைப்பு நேற்று மதிப்பாய்வு செய்ய இருக்கிறது. இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு நிதியுதவி வழங்குவதற்கு முன் ஆழமாக யோசித்து முடிவு எடுக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்திற்கு இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார். பாகிஸ்தானுக்கு 1.3 பில்லியன் டாலர் கடனை வழங்குவது குறித்து ஐ.எம்.எப். அமைப்பு நேற்று மதிப்பாய்வு செய்ய உள்ள நிலையில், இதனை இந்தியா தெரிவித்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக பாகிஸ்தானுக்காக வழங்கப்பட்ட நிதி எதற்காக பெறப்பட்டதோ அதற்காக பயன்படுத்தப்பட்டதா,அல்லது வேறு எதற்காகவும் பயன்படுத்தப்பட்டதா என்றும் கேள்வி எழுப்பி உள்ளார்.

# சிந்து நதி நீர் ஒப்பந்தம் ரத்து: தலையிட உலக வங்கி மறுப்பு

**புதுடில்லி, மே 10-**

சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்த விவகாரத்தில் தலையிட உலக வங்கி மறுத்துவிட்டது.

கடந்த 1960 ல் உலக வங்கியின் முன்னிலையில் இந்தியா, பாகிஸ்தான் இடையே சிந்து நதி நீர் பங்கீடு தொடர்பான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தத்தை மத்திய அரசு ரத்து செய்தது. இதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்தியாவால் தன்னிச்சையாக ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது எனவும் கூறியிருந்தது.

இந்நிலையில், உலக வங்கி தலைவர் அஜய் பங்கா வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: சிந்து நதி ஒப்பந்தம் தொடர்பான ஆலோசனை கூட்டம் அல்லது அது தொடர்பாக திட்டம் ஏற்படுத்துவதைத் தவிர உலக வங்கிக்கு எந்த பங்கும் இல்லை. உலக வங்கி எப்படி இந்த பிரச்னையில் தலையிட்டு சரி செய்யும் என்பது குறித்து பல ஊடகங்களில் பல யூகங்கள் வருகின்றன. ஆனால், அவை அனைத்தும் கற்பனையே. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

இதனிடையே பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உலக வங்கி தலைவர் அஜய் பங்கா உ.பி., தலைநகர் லக்னோ வந்துள்ளார். முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சந்தித்து பேசினார். பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார்.

# பாக். தாக்குதலுக்கு பதிலடி: இந்திய ராணுவம் விளக்கம்

**புதுடெல்லி, மே 10-**

பாகிஸ்தான் நடத்திய ட்ரோன் தாக்குதல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்திய ராணுவத்தின் எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில் பகிரப்பட்ட பதிவில், "பாகிஸ்தான் ராணுவம் மே 8-9 இடைப்பட்ட இரவில் இந்தியாவின் மேற்கு எல்லைகளை ஒட்டியப் பகுதிகளைக் குறிவைத்து ட்ரோன் தாக்குதல்களில் ஈடுபட்டது. வேறு சில ஆயுதங்களையும் பயன்படுத்தியது. அதேபோல் ஜம்மு காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் அருகேயும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதலில் ஈடுபட்டது.

பாகிஸ்தானின் ட்ரோன் தாக்குதல்கள் திறம்பட முறியடிக்கப்பட்டதோடு, எல்லையில் நடந்த பாகிஸ்தான் ராணுவத்தின் அத்துமீறல்களுக்கும் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டன. தேசத்தின் இறையாண்மையைப் பாதுகாப்பதிலும், பிராந்திய ஒருமைப்பாட்டைப் பேணுவதிலும் இந்திய ராணுவம் உறுதியுடன் உள்ளது. அனைத்து தீய சக்திகளுக்கும் பலத்துடன் பதிலடி கொடுக்கப்படும்." என்று தெரிவித்துள்ளது.

இந்தியா - பாக். போர் பதற்றம் பின்னணி: கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகள் 26 பேர் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். கொடூரமான இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக புதன்கிழமை நள்ளிரவில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானின் 9 பயங்கரவாத முகாம்களை அழித்தது இந்திய ராணுவம். அதன் தொடர்ச்சியாக, இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டருகே உள்ள எல்லை கிராமங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தியாவின் 15 நகரங்களை குறிவைத்து வியாழக்கிழமை பாகிஸ்தான் மேற்கொண்ட வான்வழித் தாக்குதல் முயற்சிகளை இந்தியா முறியடித்தது. அதன் தொடர்ச்சியாக இரவிலும் பாகிஸ்தானின் ஏவுகணைகளையும், ட்ரோன்களையும் வெற்றிகரமாக வீழ்த்தியது இந்திய பாதுகாப்புப் படை. எல்லையோர மாநிலங்களில் தொடர்ந்து பதற்றமான சூழலே நிலவுகிறது. ஜம்மு, ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களில் உள்ள எல்லை கிராமங்களில் உச்சக் கட்ட பாதுகாப்பு அமலாகியுள்ளது. இதுபோல், தலைநகர் டெல்லியிலும் பாதுகாப்பும், கண்காணிப்பும் அதிகப் படுத்தப்பட்டுள்ளது.

## பாட்னா: பிறந்த குழந்தைக்கு சிந்தூர் என பெயர் சூட்டிய பெற்றோர்கள்

**பாட்னா, மே 10-**

இந்தியா, பாகிஸ்தான் போரின் போது பிறந்த குழந்தைக்கு சிந்தூர் என பெயர் சூட்டப்பட்டது.

பஹல்காம் தாக்குலுக்கு பழிதீர்க்க பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் உள்ளிட்ட 9 இடங்களை குறிவைத்து இந்திய ராணுவம் சரமாரி தாக்குதல் நடத்தியது. 'ஆபரேஷன் சிந்தூர்' என பெயரிடப்பட்டு நடத்தப்பட்ட இந்த அதிதீவிர துல்லிய தாக்குதலில் பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். இந்தநிலையில் பீகார் மாநிலம் கதிகாரில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் ராக்கி குமாரி என்ற பெண், பெண் குழந்தையை பெற்றெடுத்துள்ளார். இந்திய ராணுவத்தினரின் அதிரடி நடவடிக்கையான 'ஆபரேஷன் சிந்தூர்'ரின்போது அந்த குழந்தை பிறந்ததால் குழந்தைக்கு சிந்தூர் என பெற்றோர் பெயரிட்டுள்ளனர்.

பஹல்காமில் கணவர்களை இழந்த பெண்களின் துயரை நீக்கும் வகையில் இந்திய ராணுவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த நன்னாளை நினைவுகூறும் வகையில் எங்களுடைய பெண்ணுக்கு சிந்தூர் என பெயரிட்டுள்ளோம். சிந்தூர் என்ற பெயர் தேசபக்தி உணர்வு மற்றும் உணர்ச்சி ஒற்றுமை இரண்டையும் பிரதிபலிக்கிறது. இது தேசத்திற்கு நாம் செலுத்தும் மரியாதை. எனது மகளும் நாட்டிற்கு சேவை செய்வாள் என குழந்தையின் பெற்றோர் மகிழ்ச்சியுடன் கூறினர். இதைபோல முசாபர்பூர் மாவட்டத்தில் பிறந்த 12 குழந்தைகளுக்கு 'சிந்தூர்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## மேட்டுப்பாளையம் ரயில் சேவை ரத்து

**குன்னூர், மே 10-**

குன்னூர் மேட்டுப்பாளையம், இடையே இயக்கப்படும் மலை ரயில் பாதையில் பாறைகள் விழுந்ததால் மலை ரயில் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக அவ்வப்போது மழை பெய்தது. இந்நிலையில் நேற்று மேட்டுப்பாளையம் குன்னூர் இடையே ஹில் குரோவ் பகுதில் மலை ரயில் பாதையில் பாறைகள் விழுந்தன. இதனால் மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூருக்கு இயக்க வேண்டிய மலை ரயில் ரத்து செய்யப்பட்டது. தற்போது அந்த பகுதியில் பாறைகளை அகற்றும் பணியில் ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அதே சமயம் குன்னூர் – ஊட்டி இடையே பாதிப்பின்றி மலை ரயில் இயக்கப்பட்டு வருகிறது.

# துவண்டு விட வேண்டாம்: பிளஸ்-2 மாணவர்களுக்கு முதல்வர் அறிவுரை

**சென்னை, மே 10-**

பிளஸ்-2 தேர்வில் தோல்வியடைந்த மாணவர்கள் துவண்டுவிட வேண்டாம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.

பிளஸ்-2 பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 3-ந்தேதி முதல் 25-ந்தேதி வரை நடந்து முடிந்தது. இந்த தேர்வை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இருந்து 7 லட்சத்து 92 ஆயிரத்து 494 பேர் எழுதி இருந்தனர். தேர்வு முடிவு நேற்று முன்தினம் வெளியான நிலையில், தேர்வு எழுதியவர்களில் 7 லட்சத்து 53 ஆயிரத்து 142 பேர் வெற்றி பெற்றிருக்கின்றனர். தேர்ச்சி சதவீதம் 95.03 ஆகும்.

இந்த நிலையில், பிளஸ் 2 பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது. அதில்,



"தேர்ச்சி பெற இயலாத மாணவர்களே துவண்டுவிடாதீர்கள். உடனடியாக துணைத்தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெறுங்கள். நீங்களும் உயர்கல்வி பெற்று வாழ்வில் வெற்றி பெற்றே தீருவீர்கள். அதற்கான வாய்ப்புகளை நமது அரசு உறுதி செய்யும் - தமிழ்நாடு முதல்வர்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற 7.47 லட்சம் மாணவர்களின் பெற்றோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் குரல் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், பிளஸ்-2 தேர்வு முடிவுகளில் உங்கள் பிள்ளைகள் தேர்ச்சி அடைந்த செய்தி கேட்டு உங்களைப் போலவே நானும் மகிழ்ச்சியும், பெருமையும் அடைந்தேன். கல்விதான் உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் கொடுக்கிற மிகப்பெரிய சொத்து. யாராலும் அழிக்க முடியாத சொத்து. உங்களுக்கு உதவ எல்லா வகையிலும் தமிழக அரசு தயாராக இருக்கிறது. வளமான எதிர்காலம் நோக்கி உயர்கல்வியில் காலடி எடுத்து வைக்க உள்ள உங்கள் பிள்ளைகளுக்கும், உங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.. வணக்கம்'' என்று தெரிவித்துள்ளார்.

# நாடு முழுவதும் ஏ.டி.எம்.கள் மூடலா? மத்திய அரசு விளக்கம்

**புதுடெல்லி, மே 10-**

ஏ.டி.எம். மையங்கள் வழக்கம் போல செயல்படும் என்று மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்து வருகிறது. பாகிஸ்தானின் இந்த தாக்குதல் முயற்சியை இந்திய ராணுவம் முறியடித்து வருகிறது.

இதற்கிடையில், இந்தியாவில் ஏ.டி.எம். மையங்களை மூடுவதற்கான வாய்ப்பு உள்ளதாக வாட்ஸ்ஆப்பில் ஒரு தகவல் வேகமாக பரவி வருகிறது. அதில், ரான்சம்வேர் என்ற வைரஸ் மூலம் பாகிஸ்தான் சைபர் தாக்குதல் நடத்துவதால் அடுத்த 2-3 நாட்களுக்கு ஏ.டி.எம். மையங்கள் மூடப்படவாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், ஆன்லைன் வாயிலாக எந்த பரிவர்த்தனையையும் செய்ய வேண்டாம் என்றும், DANCE OF THE HILLARY என்ற பெயரில் வாட்ஸ்ஆப்பில் வரும் வீடியோவை திறக்க வேண்டாம் எனவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் பி.பி.சி. வானொலியில் வெளியிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், பலரும் இதை வாட்ஸ்ஆப்பில் பகிர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த தகவலை மத்திய அரசு மறுத்துள்ளது. இந்த செய்தி போலியானது என்றும், ஏ.டி.எம். மையங்கள் வழக்கம் போல செயல்படும் என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சரிபார்க்கப்படாத வாட்ஸ்ஆப் செய்திகளை பரப்ப வேண்டாம் என்றும் பொதுமக்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.

# புதிய போப் தேர்வு: பிரதமர் மோடி வாழ்த்து

**புதுடில்லி, மே 10-**

புனித போப் பதினான்காம் லியோவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது, அமைதி, நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சேவையின் கொள்கைகளை முன்னேற்றுவதில் ஆழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணத்தில் கத்தோலிக்க திருச்சபையில் அவரது தலைமைத்துவம் தொடங்குகிறது. நமது பகிரப்பட்ட மதிப்புகளை மேலும் மேம்படுத்துவதற்காக, புனித ரோம் கத்தோலிக்க திருச்சபையுடன் தொடர்ந்து உரையாடலுக்கும்,

ஈடுபாட்டிற்கும் இந்தியா உறுதிபூண்டுள்ளது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய போப்பாக ராபர்ட் பிரான்சிஸ் ப்ரேவோஸ்ட் தேர்வு செய்யப்பட்டதாக வாடிகன் நேற்று முன்தினம் அறிவித்தது. ரோம் நகரின் சிஸ்டைன் தேவாலயத்தில் 133 கார்டினால்களும் சேர்ந்து புதிய போப்பைத் தேர்ந்தெடுத்தனர். போப் பதவிக்கு அமெரிக்கர் ஒருவர் தேர்வு செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும். புதிய போப் இனி 14 ஆம் லியோ என்ற பெயரால் அழைக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல்நலக் குறைவு காரணமாக கத்தோலிக்க திருச்சபையின் 266-வது தலைவர் போப் பிரான்சிஸ் கடந்த மாதம் 21 ஆம் தேதி காலமான நிலையில் புதிய போப் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## அதிகரிக்கும் போர் பதற்றம்:
# முப்படை தளபதிகளுடன் ராஜ்நாத் சிங் ஆலோசனை



**புதுடெல்லி, மே 10-**

போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், முப்படை தளபதிகளுடன் ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார்.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது. இதைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்து போர் பதற்றம் உருவாகியது.

இதனிடையே, நேற்று முன்தினம் இரவு முதல் ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் உள்ளிட்ட எல்லையோர மாநிலங்களை குறிவைத்து பாகிஸ்தான் டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த தாக்குதலுகு இந்தியா தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்த சூழலில், நாட்டில் பாதுகாப்பு சூழல் குறித்தும், நேற்று முன்தினம் இரவு நடந்த தாக்குதல் குறித்தும் தலைமை தளபதி மற்றும் முப்படை தளபதிகளுடன் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று முக்கிய ஆலோசனை நடத்தினார்.

இந்த கூட்டத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் பாதுகாப்புத் துறைத் தலைவர் ஜெனரல் அனில் சவுகான், ராணுவத் தலைமைத் தலைவர் ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படைத் தலைமை தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி, விமானப் படைத் தலைவர் ஏர் சீப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங், பாதுகாப்புச் செயலாளர் ஆர்.கே. சிங் உள்ளிட்ட ராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் பாகிஸ்தானுடனான சமீபத்திய நிலைமை குறித்து ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி விளக்கம் அளித்தார். அவரைத்தொடர்ந்து விமானப்படைத் தளபதி ஏர் சீப் மார்ஷல் ஏ.பி. சிங் விமானப் படை எடுத்த நடவடிக்கை குறித்து விளக்கம் அளித்தார்.

இந்நிலையில் போர் பதற்றம் எற்பட்டுள்ள சூழலில் முதல்முறையாக கூடுதல் படைகள் எல்லைகளுக்கு விரைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## பாகிஸ்தானுக்கு எதிரான சண்டையில்
# இந்திய ராணுவ வீரர் வீர மரணம்

**ஸ்ரீநகர், மே 10-**

பாகிஸ்தானுக்கு எதிரான சண்டையில் இந்திய ராணுவ வீரர் வீர மரணம் அடைந்தார்.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது. இதைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்து போர் பதற்றம் உருவாகியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலின்போது, ஆந்திர பிரதேச மாநிலம் சத்ய சாய் மாவட்டத்தை சேர்ந்த எல்லை பாதுகாப்புப்படை வீரர் முரளி நாயக் என்பவர் வீர மரணம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த சம்பவம் நேற்று முன்தினம் நடந்திருக்கலாம் என்றும், அவரின் உடல் அவரது சொந்த கிராமத்திற்கு எடுத்து செல்லப்படும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே ராணுவ வீரர் முரளி நாயக்கின் மறைவுக்கு ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு இரங்கல் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "இந்த கடினமான நேரத்தில் அவர்கள் அனுபவித்த துன்பங்களை உணர்ந்து, நாயக்கின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டைப் பாதுகாக்கப் பணியாற்றும் ஆயுதப் படைகளில் உள்ளவர்களின் துணிச்சலுக்கு சான்றாக முரளி நாயக்கின் தியாகம் நினைவுகூரப்படும், மதிக்கப்படும்.'' என்று தெரிவித்துள்ளார்.

## பிறந்தநாள் கொண்டாட்டங்களை தவிர்த்திடுங்கள்:
# கட்சியினருக்கு இ.பி.எஸ். வேண்டுகோள்

**சென்னை, மே 10-**

எதிர்வரும் எனது பிறந்த நாளை முன்னிட்டு, கட்சியினர் என்னை நேரில் வந்து சந்திப்பதையும், எந்தவிதமான கொண்டாட்டங்களையும் தவிர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்'' என்று எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிர்வினையாக இந்தியா 'ஆபரேஷன் சிந்தூர்' நடத்திய பிறகு, இந்தியாவின் பல நகரங்களைத் தாக்குவதற்கு பாகிஸ்தான் முற்பட்ட நிலையில், அதனை முறியடித்து நம் நாட்டு மக்களைக் காத்து வரும் மேன்மைமிகு ராணுவப் படைகளுக்கு எனது இதயமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் போர்க்கால நடவடிக்கைகளுக்கு, ஒரு தேசமாக நாம் அனைவரும் துணை நிற்க வேண்டிய தருணம் இது. இச்சூழலில், எதிர்வரும் எனது பிறந்த நாளை முன்னிட்டு, என் உயிருக்கும் உயிரான தொண்டர்கள், என்னை நேரில் வந்து சந்திப்பதையும், எந்தவிதமான கொண்டாட்டங்களையும் தவிர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எளியோர்களுக்கான ரத்த தானங்கள், மருத்துவ முகாம்கள், நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட சமூக நலச் செயல்பாட்டு நிகழ்வுகளை மட்டும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நமக்காக எல்லையில் போர் புரியும் நம் ராணுவ வீரர்கள் நலமுடன் இருக்கவும், வெற்றி பெற்றிடவும், திருக்கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களில் இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை

**நெல்லை, மே 10-**

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் நிலைய பாதுகாப்பு, அவசர கால செயல்முறைகள் குறித்து ஒத்திகை நடைபெற்றது. இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதட்டம் அதிகரித்துள்ள நிலையில் பாகிஸ்தானில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டு வருகின்றன. மேலும் பாகிஸ்தானின் தாக்குதலை முறியடிக்கும் வகையில் இந்திய எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை தொடங்கியது. மாவட்ட பேரிடர் மேலாண்மை குழுதலைவரான கலெக்டர் சுகுமார் தலைமையில் போர் சூழல் ஒத்திகை நடக்கிறது. அணுமின் நிலைய பாதுகாப்பு, அவசர கால செயல்முறைகள் குறித்து ஒத்திகை நடைபெற்று வருகிறது. அதேபோல சென்னையில் உள்ள கல்பாக்கம் அணுமின் நிலையத்திலும் பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்று வருகிறது. பாதுகாப்பு ஒத்திகையில், இந்தியக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவல்படை, இந்திய விமானப்படை, தமிழக போலீஸ், தேசிய பேரிடர் மீட்புப் படை, எண்ணெய் கையகப்படுத்தும் அமைப்புகள், சென்னை மாவட்ட நிர்வாகம் மற்றும் துறைமுக பணியாளர்கள் உட்பட 500-க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்

# அமைச்சரை தடுத்து வாக்குவாதம்: 2 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கைது



**அரூர், மே 10-**

அரூர் அருகே சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆய்வுக்கு வந்த சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரனை, தடுத்து நிறுத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 2 பேர் போலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தருமபுரி மாவட்டம், அரூர் அருகேயுள்ள கோபாலபுரத்தில் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை செயல்பட்டு வருகிறது. இதனை ஆய்வு செய்ய தமிழக சுற்றுலா மற்றும் சர்க்கரை ஆலைத்துறை அமைச்சர் ராஜேந்திரன் நேற்று (மே 9) வந்தார்.

அப்போது ஆலையின் நுழைவாயில் பகுதியில் நின்றிருந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சம்பத்குமார் (அரூர்) கோவிந்தசாமி (பாப்பிரெட்டிபட்டி) ஆகியோர் தடுத்து நிறுத்தி , ஆலை செயல்பாடுகள் குறித்து சட்டசபையில் தவறான தகவல் கூறியதாக அவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதற்கு தி.மு.க.வினர் எதிர்ப்பு தெரிவிக்க. காவல் துறையினர் எம்.எல்.ஏ.க்கள் மற்றும் அவர்களுடன் வந்த அ.தி.மு.க.வினரை தடுத்து, அமைச்சரை ஆய்வு கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அழைத்து சென்றனர்.

பின்னர் அங்கு நடந்த விவசாயிகள் சங்க ஆய்வு கூட்டத்திலும் இரண்டு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் பங்கேற்று பேசினர். அப்போது பாப்பிரெட்டிப்பட்டி எம்.எல்.ஏ. கோவிந்தசாமி பேசும்போது, "அமைச்சர் சட்டசபையில் பேசும்போது சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ள இணைமின் நிலையம் 40% பணிகள் நடைபெற்றதாக அமைச்சர் தவறான தகவல் தருகிறார்'' எனக் கூறினார்.

இதையடுத்து அங்குள்ள தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் இரண்டு எம்.எல்.ஏ.க்களும் வெளியேறுமாறு கூச்சலிட்டனர். இதனால் திமுக - அ.தி.மு.க.வினர் இடையே மோதல் உண்டாகும் சூழ்நிலை ஏற்பட்டது.

இதனால் போலீஸார் இரு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களையும் கூட்ட அரங்கில் இருந்து வெளியேற்றி, கைது செய்து போலீஸ் வாகனத்தில் அழைத்து சென்றனர். அவர்களுடன் அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் பசுபதி மற்றும் 19 அ.தி.மு.க.வினர் உள்ளிட்ட 22 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடந்தது. இதில் மாவட்ட ஆட்சியர் சதீஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இச்சம்பவத்தால் சர்க்கரை ஆலைப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## விமானநிலையங்கள் பாதுகாப்பு:
# அமித்ஷா தலைமையில் ஆய்வுக்கூட்டம்

**புதுடெல்லி, மே 10-**

இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவிவரும் ராணுவ மோதல்களுக்கு மத்தியில், நாட்டிலுள்ள விமான நிலையங்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள் பாதுகாப்பு நிலைமை குறித்து உள்துறை அமைச்சர் அமித்ஷா அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தியுள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் நடந்த ஊடுருவல் முயற்சியை முறியடித்து, 7 பயங்கரவாதிகளைக் கொன்றதாக எல்லை பாதுகாப்பு படையினர் தெரிவித்த சில மணிநேரத்துக்கு பின்பு உள்துறை அமைச்சரின் இந்த ஆய்வுக்கூட்டம் நடந்துள்ளது. அந்தக் கூட்டத்தில் இந்தியா பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் உள்ள நிலைமைகளை பற்றி அதிகாரிகளோடு ஆலோசித்தது மட்டும் இல்லாமல், நாட்டிலுள்ள விமானநிலையங்களை பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்ததாக தெரிகிறது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளை எல்லைப் பாதுகாப்புப்படை கண்காணித்து பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நிலையில், நாட்டிலுள்ள விமான நிலையங்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள் உள்ளிட்டவைகளைப் பாதுகாக்கும் பணிகளில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆய்வுக் கூட்டத்தில், மத்திய உள்துறைச் செயலாளர் கோவிந்த் மோகன், புலனாய்வு முகமையின் இயக்குநர் தாபன் தேகா, எல்லை பாதுகாப்புப் படை (பி.எஸ்.எப்), மத்திய தொழிற்சாலைகள் பாதுகாப்பு படை (சி.ஐ.எஸ்.எப்), சிவில் விமான போக்குவரத்து முகமையின் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

# இந்திய ராணுவ தளபதிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கியது மத்திய அரசு

## எல்லையோரங்களில் பலத்தை அதிகரிக்க உத்தரவு

**புதுடெல்லி, மே 10-**

எல்லையில் உச்ச கட்ட போர்ப்பதற்றம் நிலவும் நிலையில், ராணுவ தளபதிக்கு கூடுதல் அதிகாரம் அளித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. எல்லையோரங்களில் பலத்தை அதிகரிக்கவும் மத்திய அரசு ரானுவ தளபதிக்கு அறிவுறுத்தியுள்ளது.

தற்போது அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, ராணுவத்தில் நிர்வாக ரீதியான மாறுதல்களை மேற்கொள்ளலாம். நாட்டின் பிற பகுதிகளில் உள்ள ராணுவ வீரர்களை எல்லைப்பகுதிக்கு அழைத்துக்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1948 விதியின் கீழ் 3 ஆண்டுகளுக்கு இந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் சுமார் 3 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவிற்கு எல்லையை பாகிஸ்தான் பகிர்ந்து கொள்கிறது. ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களுடன் எல்லையை பகிர்ந்து கொள்கிறது. எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்து வருகிறது. பாகிஸ்தானின் இந்த தாக்குதல் முயற்சியை இந்திய ராணுவம் முறியடித்துவருகிறது. இதனால், எல்லையோர மாநிலங்களில் உச்ச கட்ட பதற்றம் நிலவுகிறது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## போர்ப் பதற்றம் எதிரொலி:
# பொதுமக்களுக்கு மத்திய அரசு அறிவுரை

**புதுடில்லி, மே 10-**

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில் மக்கள், ஆன்லைன் மற்றும் சமூக வலைதளங்களில் என்ன செய்யலாம்? என்ன செய்யக்கூடாது என்பது பற்றிய விவரங்களை வெளியிட்டுள்ளது.

மத்திய மின்னனுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை வெளியிட்டிருக்கும் அறிவுறுத்தலில்,

இந்திய எல்லையில் போர்ப்பதற்றம் உருவாகியுள்ள நிலையில் இணையதளத்தைப் பயன்படுத்தும் மக்கள் மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும்.

அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிடப்படிருக்கும் அறிவுறுத்தலில் ஆன்லைனில் வரும் தகவலைகளை கவனமுடன் கையாளவும் தவறான தகவல்களுக்கு இரையாக வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மிகக் கூடுதல் பாதுகாப்பு எச்சரிக்கையுடன் சைபர் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை கையாளவும். ஆன்லைனில் இருக்கும்போது கவனமுடன் இருக்கவும், தவறான தகவல்களுக்கு பலியாக வேண்டாம். நாட்டுப்பற்றுடன், கவனமாகவும், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**என்ன செய்யலாம்?**

அதிகாரப்பூர்வ ஆலோசனைகள், உதவி எண்கள் மற்றும் உறுதிசெய்யப்பட்ட தகவல்களை மட்டும் பகிரவும். எந்தச் செய்தியையும் பகிர்வதற்கு முன்பு அதிகாரப்பூர்வப் பக்கத்தில் உண்மையை உறுதி செய்துகொள்ள வேண்டும். தவறாக தகவல்கள் கிடைக்கப்பெற்றால், புகாரளிக்கலாம்.

என்ன செய்யக்கூடாது?

நாட்டின் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளை யாரும் வெளியிடவோ, வெளிப்படுத்தவோக் கூடாது. உறுதி செய்யப்படாத தகவல்களை மற்றவர்களுக்கு அனுப்ப வேண்டாம். வன்முறை அல்லது மதக் கலவரங்களைத் தூண்டும் தகவல்களை பகிர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




மும்மொழி கொள்கையை அமல்படுத்த உத்தரவிடக் கோரிய மனுவை தள்ளுபடி செய்து, மாநில அரசு, தேசிய கல்விக்கொள்கையை செயல்படுத்தாதது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் அல்ல என்ற சுப்ரீம் கோர்ட் கருத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

- முத்தரசன்



மத்திய அரசின் தொழிலாளர் விரோத சட்டங்களுக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மே 20-ம் தேதி நடைபெறும் வேலைநிறுத்தத்தில் திமுக தொழிற்சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் பங்கேற்கின்றன. தமிழக மக்கள் இந்த வேலைநிறுத்தத்துக்கு பேராதரவை அளிக்க வேண்டும்.

- சண்முகம்



போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், மக்கள் நிதானத்துடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். உறுதிப்படுத்தப்படாத செய்திகளை பகிர்வதை தவிர்க்க வேண்டும். இது போன்ற செயல்கள் அமைதியை குலைப்பதற்காக எதிரிகளால் உருவாக்கப்படும் ஒரு சதி அல்லது உத்தியாக இருக்கக்கூடும்.

- அகிலேஷ் யாதவ்



சுற்றுலாப் பயணிகள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டதில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், முழு நாட்டிற்கும் நீதி வழங்குவதற்கான இந்த நடவடிக்கை மன உறுதியை அளிக்கிறது. இந்த ராணுவ நடவடிக்கை நாட்டின் பாதுகாப்பிற்கு அவசியம் ஆகும்.

- மோகன் பகவத்

# ஈரோடு கொடுமுடி வட்டத்திற்குட்பட்ட பகுதியில் முடிவுற்ற திட்டப்பணிகள்: பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார்



ஈரோடு,மே.10-

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டத்திற்குட்பட்ட பகுதியில் முடிவுற்ற புதிய திட்டப்பணிகளை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டத்திற்குட்பட்ட பகுதியில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலைக் கடை மற்றும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி , பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 1229 நியாய விலைக்கடைகள் உள்ளது. 899 முழுநேர நியாய விலைக்கடைகள் மற்றும் 330 பகுதி நேர நியாய விலைக்கடைகள் மூலம் 7.64 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அந்த வகையில் கொடுமுடி வட்டம், கந்தசாமிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட், நடத்தும் முழு நேர நியாய விலைக்கடையான கந்தசாமிபாளையம் நியாய விலைக்கடை 834 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. இக்கடையிலிருந்து சுமார் 204 குடும்ப அட்டைகளை பிரித்து கவிப்பாளையம் பகுதியில் பகுதி நேர நியாய விலைக்கடை செயல்பட்டு வந்தது.

தற்போது இக்கடைக்கு ஊர் பொதுமக்கள் நிதியுதவியுடன் புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், கவிப்பாளையம் பகுதியில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட நியாய விலைக்கடையினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.

இக்கடையானது பிரதிவாரம் புதன் மற்றும் சனிக்கிழமை செயல்படும்.தொடர்ந்து, இச்சிப்பாளையம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட இச்சிப்பாளையம் ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா, கொடுமுடி வட்டாட்சியர் முருகாமி, கொடுமுடி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கூடலூரில் 11-வது வாசனை பொருட்கள் கண்காட்சி: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்



ஊட்டி, மே.10-

நீலகிரி மாவட்டம், கூடலூர், மார்னிங் ஸ்டார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், கோடை விழாவின் ஒரு அங்கமாக நடைபெற்ற 11-வது வாசனைப் பொருட்கள் கண்காட்சியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று ரிப்பன்வெட்டி துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இவ்விழாவில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்;துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர்; ஆணைக்கிணங்க சிறப்பாக துவக்கி வைக்கப்பட்டுள்ள வாசனை பொருட்கள் கண்காட்சி இன்று முதல் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. நீலகிரி மாவட்டத்தில் வருடந்தோறும் நடைபெறும் இந்த கோடை விழாவில், காய்கறி கண்காட்சி, பழக்காட்சி, வாசனை பொருட்கள் கண்காட்சி, ரோஜா காட்சி, மலர்க்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் சுற்றுலா பயணிகளை கவர்வதற்கு நடைபெறுகிறது. சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் நடத்தப்படுகிற இவற்றை அனைவரும் கண்டுகளிக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த மாதம் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, புதிய திட்டங்களை அறிவித்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி சென்றுள்ளார். அதன்படி, நீலகிரி மாவட்டத்தில் 30 ஆண்டுகளுக்கு பிறகு ஏறக்குறைய 1,018 பட்டாக்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதில் 700 பயனாளிகள் கூடலூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மேலும், பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் ரூ.5.75 கோடி செலவில் 23 சமுதாய கூடங்களும், நகர்ப்புற பகுதிகளில் வாழுகின்ற பழங்குடியினருக்கு ரூ.10 கோடி செலவில் 200 வீடுகளும் கட்டடப்படவுள்ளது. மேலும், மாவட்டத்தில் சுற்றுலா மேம்பாட்டினை கருத்திற்கொண்டு, நடுவட்டம், நாடுகாணி, எருமாடு உள்ளிட்ட பகுதிகளில் திட்ட அறிக்கை சட்டப்பேரவை மானியக்கோரிக்கையில் கோரப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் குடிநீர் மற்றும் மின்சாரத்தில் மாநிலத்தின் பிற மாவட்டத்தின் தேவையையும் பூர்த்தி செய்து வருவது இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை பெருமையடையச் செய்வதாகும். மேலும், மாவட்டத்தில் நெகிழி தடையை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பின்பற்ற வேண்டும். ஏனெனில் இயற்கை சூழலை பாதுகாத்தால், உடல் ஆரோக்கியம் மேம்படும் என அமைச்சர் தெரிவித்தார். இவ்விழாவில், அரசு தலைமைக் கொறடா தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் நீலகிரி மாவட்டத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்;. நீலகிரி மாவட்டத்தின் வாழ்வாதாரம் என தேயிலை மற்றும் சுற்றுலாவை மட்டுமே அரிதியிட்டு கூற முடியும். அதன்படி, கூடலூர் பகுதியில் சுற்றுலா பயணிகளை கவர்வதற்காகவும், கூடலூரில் விளைகின்ற வாசனை திரவியங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை சார்பில் வருடந்தோறும் இந்த வாசனை திரவிய கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதி என்பது எல்லா பயிர்களும் விளைகின்ற ஒரு இடமாகும். பல இடங்களில் சில பயிர்கள் விளையும், சில பயிர்கள் விளையாது. அப்படி காலநிலை மாறுபட்டால் விளையாத சில பயிர்கள் கூட கூடலூர் பகுதியில் செழித்து வளரும். அப்படி ஒரு சிறப்பு தன்மை இம்மண்ணிற்கு உண்டு. ஏறக்குறைய 38 வகையான பயிர்கள் இங்கு விளைவிக்கப்படுகிறது. இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள இந்த வாசனை பொருட்கள் கண்காட்சியானது 11.05.2025 வரை 3 நாட்கள் நடைபெறுகிறது.

இந்த வாசனை பொருட்கள் கண்காட்சியினை கண்டு இரசிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்றார். முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மற்றும் அரசு தலைமைக் கொறடா ஆகியோர், இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள, மாவட்ட வேலைவாய்ப்பு பயிற்சித்துறை, பேரூராட்சிகள்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை, வனத்துறை, நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல்துறை உள்ளிட்ட துறைகளின் அரங்குகளை பார்வையிட்டார்கள். இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, மாவட்ட வன அலுவலர் (கூடலூர்) வெங்கடேஷ் பிரபு, குன்னூர் சார் ஆட்சியர் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) சங்கீதா தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, கூடலூர் நகராட்சி ஆணையாளர் ஸ்வேதா ஸ்ரீ, கூடலூர் நகரமன்றத்தலைவர் பரிமளா, பேரூராட்சித்தலைவர்கள் வள்ளி (தேவர்சோலை), சித்ராதேவி (ஓவேலி), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.திராவிடமணி, வட்டாட்சியர்கள் முத்துமாரி (கூடலூர்), சர்ஜுன் நிஷா (பந்தலூர்), வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் சரவணகுமார், கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சலீம், சுப்ரமணி, செயல் அலுவலர்கள் ஹரிதாஷ் (ஓவேலி), பிரதீப்குமார் (தேவர்சோலை), திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஊட்டி அரசினர் தாவரவியல் பூங்காவில்

# 127-வது மலர்காட்சி முன்னேற்பாடு பணிகள்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆ.ராசா எம்.பி. நேரில் ஆய்வு





ஊட்டி, மே.10-

நீலகிரி மாவட்டம், ஊட்டி அரசினர் தாவரவியல் பூங்காவில் நடைபெறவுள்ள 127-வது மலர்க்காட்சியினை முன்னிட்டு நடைபெற்று வரும்; முன்னேற்பாடு பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களை கவரும் வகையில் பிரசித்தி பெற்ற ஊட்டி மலர் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இந்த மலர்க்காட்சியை கண்டு ரசிக்க உள்ளூர் மட்டுமல்லாமல் வெளியூர் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தந்து பார்வையிடுவார்கள். அதேபோல் இந்த வருடமும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் ஊட்டி மலர்க்காட்சி எதிர்வரும் 15.05.2025 ஆம் தேதி முதல் தொடங்கவுள்ள நிலையில், மலர்க்காட்சிக்கான முன்னேற்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதனை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் மேடை அமைக்கும் பணி, கண்காட்சி அரங்குகள், மலர் வடிவங்கள் உள்ளிட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர்.ஆய்வின் போது, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் , மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, ஊட்டி நகரமன்ற துணைத்தலைவர் ரவிக்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

## ஈரோடு மண்டலத்தில்

# கூட்டுறவு சங்க பணியாளர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

ஈரோடு மே 10-

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க. 2024-25ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்போது கூட்டுறவுத் துறை அமைச்சர் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண் 3 இன் படி ஈரோடு மண்டலத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து வகை கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றி வரும் பணியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்கள் என அனைத்து வகை பணியாளர்களும் தங்கள் பணியின்போதோ அல்லது வேறு வகையிலோ ஏற்படும் குறைகளை பகிர்ந்திடவும். அக்குறைகளை விதிகளுக்குட்பட்டு தீர்வு செய்திடும் வகையில் "பணியாளர் நாள்" நேற்று ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர்/பணியாளர் அலுவலர் பா.ரவிச்சந்திரன் தலைமையில், ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கோபி சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் இரா.முத்துச்சிதம்பரம் கூட்டுறவு சார்பதிவாளர்கள் செல்வி.மு.ஹசீனாபானு , .மு.தர்மராஜ் மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# கூட்டுறவுச் சங்க பணியாளர் நாள் நிகழ்வில் 10 கோரிக்கை மனுக்கள் மண்டல இணைப்பதிவாளர் இரா.தயாளன் பெற்றுக்கொண்டார்



ஊட்டி, மே.10-

கூட்டுறவுச் சங்க பணியாளர் நாள் நிகழ்வில் 10 கோரிக்கை மனுக்களை மண்டல இணைப்பதிவாளர் இரா. தயாளன் பெற்றுக்கொண்டார்.

கூட்டுறவுத்துறை 2024 - 2025-ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் குறைகளை தீர்வு செய்யும் வகையில் இரு மாதங்களுக்கு ஒரு முறை மண்டல அளவில் பணியாளர் நாள் நிகழ்வு நடத்தப்படும் என அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு துறை சார்பில் கூட்டுறவுத் துறை பணியாளர் நாள் நிகழ்வு 09.05.2025 அன்று ஊட்டியிலுள்ள கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த பணியாளர் நாள் நிகழ்வு கூட்டுறவு சங்கங்களில் தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் தங்கள் குறைகள் அடங்கிய மனுக்களை நீலகிரி மண்டல இணைப்பதிவாளர் இரா.தயாளன் மற்றும் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் மரு. தே. சித்ரா ஆகியோரிடம் வழங்கினர். பணியாளர் நாளில் 10 (பத்து) பணியாளர்கள் தங்கள் குறைகள் அடங்கிய மனுக்களை வழங்கினர். இம்மனுவை உரிய சட்டம், விதிகள், அரசாணைகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் படி இரண்டு மாத காலக்கெடுவுக்குள் தீர்வு செய்யப்படும் என நீலகிரி மண்டல இணைப்பதிவாளர் தெரிவித்தார். பணியாளர் நாள் நிகழ்வில் துணைப்பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) கமல் சேட், குன்னூர் கூட்டுறவு நகர வங்கி செயலாட்சியர் சு. குமாரசுந்தரம், நீலகிரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை மேலாண்மை இயக்குநர் சி. அய்யனார், கூட்டுறவு துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சங்க பணியாளர்கள் கலந்து கொண்டனர்

## நீலகிரி மாவட்டத்தில்

# பிளஸ்-2 தேர்வில் 93.97 சதவீதம் தேர்ச்சி

ஊட்டி, மே 10-

தமிழகம் முழுவதும் பிளஸ் 2 பொதுத்தேர்வுகள் கடந்த மார்ச் மாதம் 3ம் தேதி துவங்கி 25ம் தேதி வரை நடைபெற்றது. நீலகிரி மாவட்டத்தில் இத்தேர்வினை 84 பள்ளிகளை சேர்ந்த 2891 மாணவர்கள், 3361 மாணவியர்கள் என மொத்தம் 6252 பேர் தேர்வு எழுதினார்கள். இந்நிலையில் பிளஸ் 2 வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று வெளியாகின. இதில் 2665 மாணவர்கள், 3210 மாணவியர்கள் என மொத்தம் 5875 பேர் தேர்ச்சியடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் 93.97 சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இது கடந்த ஆண்டை காட்டிலும் 0.30 சதவீதம் குறைவு ஆகும். மாநில அளவில் நீலகிரி மாவட்டம் 29வது இடத்தை பிடித்துள்ளது. இதில், மாணவர்கள் 92.18 சதவீதமும், மாணவிகள் 95.51 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் உள்ள 37 அரசு பள்ளிகளில் 1107 மாணவர்கள், 1093 மாணவிகள் என 2200 பேர் தேர்வு எழுதினர். இதில் 977 மாணவர்கள், 998 மாணவிகள் என 1975 மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றனர். அரசு பள்ளிகளில் 89.77 சதவீதம் மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாநில அளவில் 30வது இடத்தை பிடித்துள்ளது. அதிகரட்டி, அணிக்கொரை, தாவணெ அரசு மேல்நிலை பள்ளிகள், குன்னூர் நீலகிரி அரசு மாதிரி மேல்நிலை பள்ளி ஆகிய 4 அரசு பள்ளிகள், குஞ்சப்பனை அரசு உண்டு உறைவிட பள்ளி, குன்னூர் புனித அந்தோனியார் மேல்நிலை பள்ளி, குன்னூர் ஸ்ரீசாந்தி விஜய் பெண்கள் மேல்நிலை பள்ளி, மசினகுடி ஸ்ரீசாந்தி விஜய் மேல்நிலை பள்ளி, உப்பட்டி பாரத மாதா மேல்நிலை பள்ளி, கோத்தகிரி புனித மரியன்னை பெண்கள் மேல்நிலை பள்ளி, குன்னூர் புனித சூசையப்பர் ஆங்கிலோ இந்தியன் ஆண்கள் மேல்நிலை பள்ளி, அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை மேல்நிலை பள்ளி, லவ்டேல் நீலகிரி மெட்ரிக் பள்ளி, கோத்தகிரி பாண்டியராஜ் நினைவு மெட்ரிக் பள்ளி, அரவேணு ஆல்பா ஜிகே., மெட்ரிக் பள்ளி, அகலார் ஸ்ரீசத்திய சாய் மெட்ரிக் பள்ளி, எருமாடு நீலகிரி மெட்ரிக் பள்ளி, கூடலூர் புனித அந்தோனியார் மெட்ரிக் பள்ளி, பந்தலூர் ட்விஸ் மெட்ரிக் பள்ளி, வாழைத்தோட்டம் ஜிஆர்ஜி., நினைவு பள்ளி என 5 அரசு உதவி பெறும் பள்ளிகள், 10 தனியார் பள்ளிகள் என மொத்தமுள்ள 84 பள்ளிகளில் 20 பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சியை பெற்றுள்ளன.தற்போது ரேங்க் முறை இல்லை என்பதாலும், தேர்வு முடிவுகள் வெளியிட்டவுடன் சம்பந்தப்பட்ட மாணவ, மாணவியர்களின் பதிவு செய்யப்பட்ட செல்போன் எண்ணிற்கு மதிப்பெண்கள் அனுப்பப்பட்டு விடுவதாலும்; உடனுக்குடன் முடிவுகளை அறிந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பள்ளிகளில் மாணவர்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது.

# ஊட்டியில் உலக ரெட்கிராஸ் தின நிகழ்ச்சி: 19 ஆண்டுகள் செயல்பட்ட முன்னாள் தலைவர் கே.ஆர்.மணி கௌரவிப்பு



ஊட்டி, மே.10-

உலக ரெட்கிராஸ் தினம் மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் 19 ஆண்டுகள் நீலகிரி ரெட்கிராஸ் சொசைட்டியின் சேர்மனாக செயல்பட்ட 90 வயது நிறைவடைந்த கேப்டன் கே.ஆர்.மணியை கௌரவப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஊட்டியிலுள்ள பிரீத்தி கிளாசிக் டவர்ஸ் ஓட்டல் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நீலகிரி மாவட்ட ரெட்கிராஸ் சொசைட்டி தலைவர் பேராசிரியர் கோபால் தலைமை தாங்கி பேசினார். துணை தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் மோரீஸ் சாந்தா குரூஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் ஊட்டி நகர போக்குவரத்து காவல் ஆய்வாளர் அனிதா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பேசியதாவது-

சாலை பாதுகாப்பு நமது கையில்தான் உள்ளது. அதற்கு அடுத்தவர்களை குறை சொல்லக்கூடாது. வாகனத்தை எடுக்கும் முன் டயரில் காற்று உள்ளதா? ஆயில், தண்ணீர் பார்க்க வேண்டும், ஹாரன் அடிக்கிறதா? லைட் எரிகிறதா என்பதை பார்த்து எடுக்க வேண்டும். வாகனங்களை அடிக்கடி பரிசோதனை செய்து வைத்துக்கொள்ள வேண்டும். 18 வயது நிறைவடைந்து 19 வயது ஆரம்பித்தவுடன் ஓட்டுநர் உரிமம் பெற்ற பின்னர் தான் வாகனங்களை இயக்கவேண்டும். 18 வயதுக்கு கீழ் உள்ள சிறார்கள் வாகனத்தை இயக்கினால் அது பெற்றோரின் பொறுப்பாகும். நம்முடைய கவன குறைவினால்தான் விபத்து ஏற்படுத்துகிறது. எனவே சாலை விதிகளை மதித்து வாகனங்களை இயக்க வேண்டும் என்றார்.

கேப்டன் கே.ஆர்.மணி பேசுகையில் வாகன ஓட்டுநர்கள் பிட்டாக இருந்தால் 25 சதவீதம் விபத்து நடக்காது. வாகனம் சரியாக இருக்கிறதா என்பதை பார்த்து எடுத்தால் 25 சதவீதம் விபத்து நடக்காது. அதேபோல் சாலை நன்றாக இருந்தால் 25 சதவீதம் விபத்து நடக்காது. எனவே எல்லோரும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றார்.

அதனைத்தொடர்ந்து நீலகிரி ரெட்கிராஸ் சொசைட்டியில் 19 ஆண்டுகள் சேர்மனாக செயல்பட்ட கேப்டன் கே.ஆர்.மணி மற்றும் அவரது துணைவியார் டாக்டர் சரஸ்வதி மணி ஆகியோருக்கு ரெட்கிராஸ் மாவட்ட தலைவர் பேராசிரியர் கோபால், செயலாளர் மோரீஸ் ஆகியோர் சால்வை அணிவித்து கௌரவித்தனர். இந்நிகழ்வில் ரெட்கிராஸ் உறுப்பினர்கள்; பலர் கலந்து கொண்டனர்.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை
நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை



ஊட்டி அரசு கலைக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் நாய்கள் கண்காட்சியில் முதல் நாளான நேற்று நடைபெற்ற கீழ்படிதல் போட்டியில் வெற்றி பெற்ற நாயின் உரிமையாளருக்கு பரிசு வழங்கப்பட்டது.

### 3 நாட்களாக மூடப்பட்டிருந்த

# தொட்டபெட்டா காட்சி முனை திறப்பு: சுற்றுலா பயணிகள் புகைப்படம் எடுத்து மகிழ்ச்சி



ஊட்டி, மே.10-

ஒற்றைக் காட்டு யானை நடமாட்டம் காரணமாக கடந்த 3 நாட்களாக தொட்டபெட்டா காட்சிமுனைக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், காட்டு யானை வேறு பகுதிக்கு இடம்பெயர்ந்ததால், தொட்டபெட்டா சிகரத்திற்கு மீண்டும் சுற்றுலா பயணிகளுக்கு 3 நாட்களுக்குப் பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் பர்லியார் மலைப்பாதையில் தாயை பிரிந்து சில மாதங்களான சுமார் 8 வயது மதிக்கத்தக்க இளம் வயதுடைய ஆண் காட்டு யானை ஒன்று வழிதவறி முதல் முறையாக ஊட்டி அருகே அமைந்துள்ள தொட்டபெட்டா மலைச்சிகரத்தில் உலா வந்தது. இதனால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி கடந்த 3 நாட்களாக தொட்டபெட்டா மலைச்சிகரத்திற்கு செல்ல வனத்துறை சார்பில் தடை விதிக்கப்பட்டது. இதேபோல் வியாபாரிகளுக்கும் கடைகளை திறக்க அனுமதி வழங்கப்படவில்லை.

50-க்கும் மேற்பட்ட வனத்துறையினர் காட்டு யானையின் நடமாட்டத்தை கண்காணித்து அடர்ந்த வனப்பகுதிக்கு விரட்டும் பணியில் இரவு பகலாக ஈடுபட்டு வந்தனர். ஆனால் காட்டு யானை உடனடியாக அந்த இடத்தை விட்டு செல்லாமல் வனத்துறையினருக்கு போக்கு காட்டி வந்தது மேலும் ஊட்டி அருகே உள்ள தனியார் சாக்லேட் தொழிற்சாலை வரை வந்து திரும்பியது. காட்டு யானை நடமாட்டத்தை ட்ரோன் கொண்டு வனத்துறையினர் கண்காணித்தனர். மேலும் காட்டு யானையை ஊட்டி நகருக்குள் வரவிடாமல் பட்டாசு வெடித்து வனப்பகுதிக்குள் விரட்டினர்.

இந்தநிலையில் தொட்டபெட்டா மலைச்சிகரத்தில் சுற்றித்திரிந்த காட்டு யானை குன்னூர் நோக்கி இடம்பெயர்ந்து சென்றதை வனத்துறை உறுதி செய்துள்ளனர். யானை நடமாட்டம் குறைந்த காரணத்தினால் 3 நாட்களுக்குப் பின் நேற்று மதியம் 12 மணி முதல் தொட்டபெட்டா மலைச்சிகரத்திற்கு சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறை சார்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து ஊட்டிக்கு வருகை புரிந்த சுற்றுலா பயணிகள் தொட்டபெட்டா மலை சிகரத்திற்கு சென்று நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள இயற்கை காட்சிகளை கண்டு ரசித்தும் செல்பி புகைப்படங்கள் எடுத்து மகிழ்ந்தனர். காட்டு யானை மீண்டும் திரும்பி வரலாம் என்று வனத்துறையினர் சந்தேகித்ததால் அவர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



வளசரவாக்கம் மண்டலம் 147வது வார்டு மேட்டுக்குப்பம் காந்தி தெருவில் ரூ.1 கோடியே 25 லட்சம் மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியை காரம்பாக்கம்.க கணபதி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் ரமணிமாதவன், வட்ட செயலாளர் எஸ்.ஜி.மாதவன், மாவட்ட பிரதிநிதிகள் க.பிருந்தாவனம்,சதீஷ் மற்றும் பலர் உள்ளனர்.

# அதிமுக சார்பில் கோல போட்டி

சென்னை மே 10

அ தி மு க பொதுச்செயலாளர், எடப்பாடி.கே.பழனிச்சாமியின் பிறந்தநாளை முன்னிட்டு ஆயிரம் விளக்கு தொகுதி 118 வது வார்டு, வரதராஜபுரம் ,நல்லான் தெருவில் கோலப் போட்டி கே விமலா, எஸ் பொம்மி, சுகுணா ஆகியோர் ஏற்பாட்டில் முன்னாள் வட்ட செயலாளர் ஜிம்கிளி (எ) இ.பச்சையப்பன் தலைமையில் இலக்கிய அணி இணை செயலாளர் டி.சிவராஜ் முன்னிலையில் கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு பொருட்களை மகளிர்அணிசெயலாளர்,பா.வளர்மதி வழங்கினார்.இந்த நிகழ்ச்சியில் வடக்கு பகுதி செயலாளர் நுங்கை எஸ் செல்வகுமார், மாவட்ட மகளிர் அணி செயலாளர்ராஜேஸ்வரி,மற்றும் பலர் உள்ளனர்.

**நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திண்டுக்கல் மண்டலம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**(இரு உறை முறை)**
ந.க. எண். 201/2025/பேரூ1 நாள்.08.05.2025.

திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சிகளில் (அய்யம்பாளையம்-1, பாலசமுத்திரம் -1, எரியோடு-1, கன்னிவாடி-1, நெய்க்காரபட்டி-1, பண்ணைக்காடு-1, பட்டிவீரன்பட்டி-1, சேவுகம்பட்டி-1, சித்தையன்கோட்டை-1, ஸ்ரீராமபுரம் - 1, வேடசந்தூர்-1 ) 2024-2025 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் 2.0 (SBM 2.0) திட்டத்தின்கீழ், ரூ.475.75/- இலட்சம் மதிப்பீட்டில் கசடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் (Cess Pool Tankers) 11 எண்ணம் சப்ளை செய்வதற்கு (தொகுப்பு-1) தகுதி வாய்ந்த நிறுவனத்தில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) இணையதளம் வாயிலாக மட்டும் வரவேற்கப்படுகிறது.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் - 14.05.2025 காலை 11.00 மணி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திண்டுக்கல்- 624 001.
   ஆ) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் சமர்ப்பித்தல் - 27.05.2025 மாலை 03.00 மணி வரை.
   இ) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறத்தல்- 27.05.2025. மாலை 03.30 மணி
   மேற்படி வலைதளம் வழியாக அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிக்குரிய 1% டேவணித் தொகையினை (முன் வைப்பு தொகை ரூ.4,75,750/-), செலுத்தப்பட வேண்டும்.
3. மற்ற நிபந்தனைகளை https://tntenders.gov.in என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்துள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.

ஒம்/- இரா.இராஜா,
செ.ம.தொ.இ/2076/ஒப்பந்தப்புள்ளி/2025 பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மண்டலம்.

# சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்து கலந்தாலோசனை கூட்டம்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது



சென்னை,மே.10

சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி. கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் சிஎம்டிஏ சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்தும், திட்டங்களை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு மதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு.பிரபாகர், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர்கே.ஜே.பிரவீன் குமார், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள்.எஸ். ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியன், ந.ரவிக்குமார், தலைமைப் பொறியாளர்கள் (சிஎம்டிஏ) ப.மகாவிஷ்ணு, (உ.பொ.வ.துறை) வெங்கடேசன், கண்காணிப்புப் பொறியாளர்கள்ராஜமகேஷ்குமார், மா.பாலமுருகன் கலந்து கொண்டனர்.

**நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திண்டுக்கல் மண்டலம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**(இரு உறை முறை)**
ந.க. எண். 201/2025/பேரூ1 நாள்.08.05.2025.

திண்டுக்கல் மண்டலம், கரூர் மாவட்ட பேரூராட்சிகளில் (அரவக்குறிச்சி-1, கிருஷ்ணராயபுரம்-1, மருதுர்-1, புலியூர்-1, புஞ்சைதோட்டக்குறிச்சி-1, உப்பிடமங்கலம் - 1) 2024-2025 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் 2.0(SBM 2.0) திட்டத்தின்கீழ், ரூ.259.50-இலட்சம் மதிப்பீட்டில் கசடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் (Cess Pool Tankers) 6 எண்ணம் சப்ளை செய்வதற்கு(தொகுப்பு-2) தகுதி வாய்ந்த நிறுவனத்தில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) இணையதளம் வாயிலாக மட்டும் வரவேற்கப்படுகிறது.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் -14.05.2025 காலை 11.00 மணி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திண்டுக்கல்
   ஆ) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் சமர்ப்பித்தல் - 27.05.2025 மாலை 03.00 மணி வரை.
   இ) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறத்தல் - 27.05.2025. மாலை 03.30 மணி
   மேற்படி வலைதளம் வழியாக அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிக்குரிய 1% டேவணித் தொகையினை (முன் வைப்பு தொகை ரூ.2,59,500/-), செலுத்தப்பட வேண்டும்.
3. மற்ற நிபந்தனைகளை https://tntenders.gov.in என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்துள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.

ஒம்/- இரா.இராஜா,
செ.ம.தொ.இ/2076/ஒப்பந்தப்புள்ளி/2025 பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மண்டலம்.

தமிழ்நாடு அரசு
**திருநெல்வேலி மாவட்டம். சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சி**
ந.க.எண். 420 / 2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 06.05.2025

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சியில் TURIP திட்டம் 2025-26 இன் கீழ், ரூ.134.50 இலட்சம் மதிப்பீட்டில், தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து 20.05.2025 பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் மற்றும் இடம்:

| | |
|---|---|
| அ) முன் கலந்தாய்வு கூட்டம் | 14.05.2025 காலை 11.00 மணி, சேரன்மகாதேவி பேரூராட்சி அலுவலகம் |
| ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 21.05.2025 மாலை 3.00 மணி வரை (ஆன்லைன் மூலம் மட்டும்) |
| இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 21.05.2025 மாலை 3.30 மணி (ஆன்லைன் மூலம் மட்டும்) |

3) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் ஆன்லைன் மூலம் திறக்கப்படும்.

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி சேரன்மகாதேவி
திருநெல்வேலி மாவட்டம்
செ.ம.தொ.இ/ 2066/ ஒப்பந்தப்புள்ளி /2025

# நீர்வரத்து இன்றி ஈரோடு மாவட்ட அணைகளின் நீர்மட்டம் சரிந்தது

ஈரோடு, மே. 10 -

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி

கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக அணைக்கு வரும் நீர்வரத்தை விட பாசனங்களுக்கு அதிக அளவில் நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

நேற்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர் மட்டம் 68.54 அடியாக குறைந்து உள்ளது. பவானிசாகர் அணைக்கு இன்று காலை நிலவரப்படி 104 கன அடியாக நீர் வரத்து வந்து கொண்டிருக்கிறது. பவானிசாகர் அணையில் இருந்து குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 150 கன அடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதேபோல் கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்கு 5 கன அடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

நேற்று காலை நிலவரப்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 25.44 அடியாக உள்ளது. இதேபோல் வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 23.65 அடியாக உள்ளது. 30 அடி கொள்ளளவு கொண்ட பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 16.83 அடியாக உள்ளது.



ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் பா.ரவிச்சந்திரன் தலைமையில் கூட்டுறவு பணியாளர்களின் குறைகளை போக்கிடும் பணியாளர் நாள் நிகழ்வு நடைபெற்றது.

**படவீடு (தேர்வுநிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்**
ந.க.எண்: 15 / 2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை – மாநில நிதிக்குழு திட்டம் (SFC-URDF 2025 - 26) நாள்: 05.05.2024

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்த தாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல் |
|---|---|---|---|---|---|
| 1 | படவீடு தேர்வுநிலை பேரூராட்சி வார்டு எண்: 3, செல்வராஜ் கடை முதல் தங்கராஜ் கடை வரை, சக்தி தியேட்டர் அருகில் உள்ள சாலை, மரவம்பாளையத்தான்காடு சாலை, குறுக்கு தெரு 1 மற்றும் 2, மரவம்பாளையத்தான்காடு ஓடை குறுக்கு வீதி, பூங்கா எதிர்சாலை, சின்னாக்கவுண்டனூர் சாலை முதல் மரவம்பாளையத்தான்காடு சாலை முடிவு வரை, வார்டு எண்: 9, பவானி மெயின் ரோடு முதல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, குடித்தெரு மாரியம்மன் கோவில், முதல் அங்கன்வாடி பின்புற சாலை, மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி முதல் மாரியம்மன் கோவில் வரை மற்றும் இரண்டாவது வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்பாடு செய்தல் | 179.00 | ரூ. 1,79,000 | Class - I | 6 மாதங்கள் |

நாமக்கல் மாவட்டம் படவீடு பேரூராட்சி 2025-26-ம் ஆண்டு மாநில நிதிக்குழு (SFC-URDF 2025-26) மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் வழியாக வரவேற்கப்படுகின்றன. படவீடு பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் **20.05.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணி** வரை இணையதளம் வழியாக பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **20.05.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு** செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.

1. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை படவீடு பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **20.05.2025 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in** என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(ஒம்/– செ. ராதாமணி) தலைவர், படவீடு தேர்வுநிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்
செ.ம.தொ.இ/2070/ஒப்பந்தப்புள்ளி/2025
(ஒம்/– பா. ராஜசேகரன்) செயல் அலுவலர், படவீடு தேர்வுநிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்

**வேலூர் சிறப்புநிலை பேரூராட்சி–நாமக்கல் மாவட்டம்**
**மூலதன மானிய நிதி திட்டம் 2025–26**
ந.க.எண்.202/2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** தேதி: 06.05.2025

| | |
|---|---|
| **வேலையின் பெயர்:** வேலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட சர்வே எண்.28A/2 பகுதியில் அறிவுசார் மையம் கட்டுதல். | |
| மதிப்பீடு தொகை ரூ. (வரிஉட்பட) : 1,60,00,000 | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் : 1,60,000 |
| ஒப்பந்ததாரரின் தகுதி : Class - I | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) : 1 ஆண்டு |

**வேலூர் பேரூராட்சியில் மூலதன மானிய நிதி திட்டம் 2025–26ன்** கீழ் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து **20.05.2025 செவ்வாய் கிழமை அன்று 3.30 மணிக்கு** நடைபெற உள்ள Online Tender-க்கு இண்டு உறைகள் **(Two cover System)** கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் முன்வைப்புத் தொகையினை **20.05.2025 செவ்வாய் கிழமை பிற்பகல் 03.00 மணிவரை https://tntenders.gov.in** என்ற இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். மேற்கண்ட இணையதள முகவரியில் **06.05.2025** முதல் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **20.05.2025 செவ்வாய் கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு** அப்போது வருகைதந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை வேலூர் சிறப்புநிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**மு.லட்சுமி,** தலைவர், வேலூர் சிறப்புநிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.
**பா.மூவேந்திரபாண்டியன்,** செயல் அலுவலர் (பொ.), வேலூர் சிறப்புநிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.
செ.ம.தொ.இ / 2081 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
**பூலாம்பாடி பேரூராட்சி – பெரம்பலூர் மாவட்டம்**
**மின்னனு (இரு உறை) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
ந.க.எண்.254/2025, நாள்: 07.05.2025

1. பெரம்பலூர் மாவட்டம், பூலாம்பாடி பேரூராட்சியில், தமிழ்நாடு நகர்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2025–26ன் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.
2. பணி விபரம்: வார்டு எண்.15 அம்பேத்கார் நகர் மற்றும் வார்டு எண்.06 வடசீனிவாசபுரம் தார் சாலை மற்றும் வடிகால் அமைத்தல்; மதிப்பீடு ரூ. லட்சத்தில்: 111.00; வைப்புத் தொகை ரூ.: 1,11,000; வேலை முடிக்க வேண்டிய காலம்: 180 நாட்கள்
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து 08.05.2025 ஆம் நாள் முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி குறித்த முழு விபரங்களையும் பெறலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழி மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள்: 1. ஒப்பந்ததாரர்கள் முன்கலந்தாய்வு கூட்டம் நடைபெறும் நாள் / இடம்: 23.05.2025 வெள்ளிக்கிழமை, காலை 11.00 மணி, பூலாம்பாடி பேரூராட்சி அலுவலகம்; 2. ஒப்பந்தப்புள்ளி நமூனா பதிவிறக்கம் செய்தல்: 09.05.2025 மாலை 3.00 மணி முதல்; 3. ஒப்பந்தப்புள்ளி சமர்பித்தல்: 29.05.2025 மாலை 3.00 மணி வரை; 4. ஒப்பந்தப்புள்ளி திறந்தல்: 29.05.2025 மாலை 3.30 மணிக்கு
5. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். 6. இதர விபரங்களை அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

திருமதி. **இரா.பாக்யலட்சுமி,** தலைவர், பூலாம்பாடி பேரூராட்சி, பெரம்பலூர் மாவட்டம்.
செ.ம.தொ.இ / 2035 / ஒப்பந்தப்புள்ளி / 2025
திருமதி. **ஆ.வே.ருக்மணி,** செயல் அலுவலர், பூலாம்பாடி பேரூராட்சி, பெரம்பலூர் மாவட்டம்.

# தமிழ்நாடு ஒற்றை சாளர இணையதளம் குறித்த வசதியாக்கல் கூட்டம்: கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடந்தது





ஈரோடு,மே.10-

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தொழில் மையம் மற்றும் வழிகாட்டி தமிழ்நாடு அமைப்பு இணைந்து, தமிழ்நாடு ஒற்றை சாளர இணையதளம் குறித்த வசதியாக்கல் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கராதலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை 'வழிகாட்டி தமிழ்நாடு அமைப்பின் அலுவலர்கள் தமிழ்நாடு வணிக வசதிச் சட்டம் ரூ விதிகள், 2018 சட்டத்தின் கீழ் தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணையதளம், அவற்றின் பயன்பாடு மற்றும் வசதியாக்கல் குறித்தும், மாவட்ட தொழில் மையத்தின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், முதலீட்டாளர்கள், தொழில் முனைவோர்கள் வணிகம் தொடர்பான அனைத்து ஒப்புதல்கள், உரிமங்கள், தடையில்லா சான்றிதழ்கள், ஆட்சேபனை இல்லா சான்றிதழ்களை குறித்த நேரத்தில் பெறுவதற்கான இணையவழி சேவையாகும். தமிழ்நாடு ஒற்றைச்சாளர இணையதளம் 200 சேவைகளையும், 40 அரசுத் துறைகள், முகவர் நிறுவனங்களையும் உள்ளடக்கியது. இது பல்வேறு துறைகளிலிருந்து குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அனுமதி பெறுவதை எளிதாக்குகிறது என்பது குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இக்கூட்டத்தில் நான் முதல்வன், புத்தாக்க நிறுவனம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.இக்கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் மாவட்ட அளவிலான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றைச் சாளரக் குழுவின் சேவைகளை பயன்படுத்த ஈரோடு மாவட்டத்தில் உள்ள பல்வேறு தொழில் அமைப்புகள் தங்களது உறுப்பினர்களுக்கு வசதியாக்கல் குறித்த விபரங்களை தெரிவித்து, முதலீட்டாளர்கள், தொழில் முனைவோர்கள் பயன்பெற வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) திருமுருகன், இணை இயக்குநர் (வேளாண்மை-உழவர் நலத்துறை) தமிழ்ச்செல்வி, மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் சண்முகவடிவு, சென்னை 'வழிகாட்டி தமிழ்நாடு' அமைப்பின் அலுவலர்கள், முதலீட்டாளர்கள், தொழில் முனைவோர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ஆரோக்கியம் தரும் சத்துகள் நிறைந்த கலிபோர்னியா பாதாம் உடன் அன்னையர் தினத்தை கொண்டாடுங்கள்

கோவை, மே.10-

நமது தாய் நம் மீது செலுத்தும் அளவில்லா அன்பு, அக்கறை மற்றும் அமைதியான வலிமையை எந்த ஒரு நாளும் உண்மையிலேயே பிரதிபலிக்க முடியாது. நாம் சாப்பிட்டோமா என்று கேட்பதில் இருந்து அனைவரும் நலமாக இருக்கிறார்களா என்பதை உறுதி செய்வது வரை, நமது அம்மாக்கள் எப்போதும் மற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். ஆனால், எப்படி இருக்கிறார்கள் அல்லது அவர்களின் உடல்நலம் மற்றும் ஆரோக்கியம் குறித்து நாம் எத்தனை முறை கேட்டிருப்போம்? இந்த அன்னையர் தினத்தில் நம்மைப் பராமரித்து பாதுகாத்து வரும் நமது அன்னையின் உடல் நலத்தில் அக்கறை கொண்டு அவரை போற்றி பாதுகாப்போம் என்று உறுதியேற்போம். அவர் மீது உங்களின் அன்பையும் பாசத்தையும் காட்டும் ஒரு வழி, கலிபோர்னியா பாதாமை அவருடைய அன்றாட வழக்கத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதுதான். அவர் எண்ணற்ற வேலைகளை நாள் முழுவதும் பரபரப்பாக செய்யும்போது, பாதாம் அவருக்கு உற்சாகத்தை தருவதோடு, அவரது நல்வாழ்வு மற்றும் சருமத்திற்கு ஊட்டமளிப்பது உள்ளிட்ட பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. பருப்புகளில் ராஜா என்று அழைக்கப்படும் கலிபோர்னியா பாதாமில், புரதம், துத்தநாகம், மெக்னீசியம் மற்றும் வைட்டமின் ஈ உள்ளிட்ட 15 அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் உள்ளது. நாள் ஒன்றுக்கு ஒரு கைப்பிடி பாதாம் எடுத்துக் கொள்வது என்பது ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவும், இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கவும், பளபளப்பான சருமத்தை மேம்படுத்தவும், உடல் எடையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் உதவும். நமது அன்னை அனைவரையும் கவனித்துக் கொள்ளும்போது நாம் அவரைக் கவனித்துக் கொள்ள, இந்த அன்னையர் தினத்தில், அவருடைய உடல்நலம் எவ்வளவு முக்கியமானது என்பதை ஊட்டமளிக்கும் மற்றும் சத்துக்கள் நிறைந்த ஒரு பரிசின் மூலம் அவருக்கு உங்கள் அன்பை பகிர்ந்து கொள்ளுங்கள். ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய ஆலோசகர் ஷீலா கிருஷ்ணசாமி கூறுகையில், இதய நோய் பெரும்பாலும் 'ஆண்களின் பிரச்சனையாக' பார்க்கப்படுகிறது, ஆனால் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஆய்வு ஒன்று, இந்தியாவில் பெண்களிடையே மரணத்திற்கு இது முக்கிய காரணமாக உள்ளது என்று தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு
**குழித்துறை நகராட்சி- 100-வது வாவுபலிப் பொருட்காட்சி உரிமங்களுக்கான மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 100-வது வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு அட்டவணையில் கண்ட இனங்களுக்கு நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் குத்தகை எடுக்கும் உரிமையை குழித்துறை நகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 29-05-2025-ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணி வரையிலும் ஒப்பந்தப்புள்ளியும் அதன் பின்னர் மேற்படி தினம் 11.30 மணிக்கு பகிரங்க பொது ஏலமும் விடப்படும் மற்றும் நிர்வாக நலன்கருதி ஆணையாளர் ஒத்திவைக்கப்படும் நாட்களிலும் நடத்தப்படும். குத்தகை உரிமத்தில் கலந்து கொள்ள வைப்புத் தொகை மற்றும் நிராந்தர வைப்புத்தொகையினை 28-05-2025-ம் நாள் புதன்கிழமை மாலை 5.00 மணிக்குள் ஆணையாளர், குழித்துறை நகராட்சி (or)Commissioner Kuzhithurai Municipality, என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவேண்டும். அவ்வாறு ஏலப்பொறுப்புத்தொகை செலுத்தியவர்கள் மட்டும் தான் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். மேலும் நகர்மன்றம் மூலம் உறுதி செய்யப்படும் உரிமதாரர் குத்தகைத்தொகையுடன் வருமானவரி 1%-ம், மற்றும் 18% சேவை வரியும், குத்தகை தொகையுடன் ஒரே தவணையில் செலுத்தவேண்டும். கூடுதல் விபரங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**02-07-2025 முதல் 31-07-2025 முடியவுள்ள காலத்திற்கு பொது ஏல உரிமை இனங்கள்**

| வ. எண் | குத்தகை உரிமம் | வைப்புத் தொகை ரூபாய் வங்கி வரைவோலை (30 நாட்களுக்கு மட்டும்) | நிராந்தர வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தும் உரிமை மற்றும் நகராட்சியில் குறிப்பிடும் அளவுகளில் கடைகள் அமைத்து நடத்தும் உரிமம் மற்றும் விளம்பரம் செய்யும் உரிமம் | 70.00 இலட்சம் | 5.00 இலட்சம் |

**இதர விபரங்களுக்குதொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
commr.kuzhithurai@tn.gov.in / commr.kuzhithurai@gmail.com

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி
செ.ம.தொ.இ / 2082 / ஒப்பந்தப்புள்ளி / 2025

## இந்தியா - பாகிஸ்தான் போர்ப்பதற்றம்:
# ஐ.பி.எல். போட்டிகள் ஒரு வாரத்துக்கு நிறுத்தம்
## பி.சி.சி.ஐ. அதிகாரபூர்வ அறிவிப்பு



**மும்பை, மே 10-**

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர்ப் பதற்றம் தீவிரமடைந்து வருவதை அடுத்து ஐ.பி.எல். போட்டிகள் ஒரு வார காலத்துக்கு நிறுத்தி வைக்கப்படுவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**அவசர ஆலோசனை...**

முன்னதாக, விமானத் தாக்குதல் எச்சரிக்கைகள் காரணமாக தர்மசாலாவில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸ் மற்றும் டெல்லி கேபிடல்ஸ் இடையேயான போட்டி பாதியில் கைவிடப்பட்டது. இதையடுத்து, மற்ற போட்டிகள் தொடர்பாக முடிவெடுக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.), நேற்று (மே.9) அவசர ஆலோசனை நடத்தியது. கூட்டத்துக்குப் பின்னர் பேசிய சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாக இயக்குநர் கே.எஸ்.விஸ்வநாதன், "ஐ.பி.எல். தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. வீரர்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பி வருகின்றனர்" எனத் தெரிவித்தார். "நாடு போரில் இருக்கும் போது கிரிக்கெட் தொடர்வது நல்லதல்ல" என்று பி.சி.சி.ஐ. அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

**காலவரையின்றி...**

இதனையடுத்து ஐ.பி.எல். 2025 போட்டிகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக தகவல் பரவின. இந்நிலையில், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர்ப் பதற்றம் தீவிரமடைந்து வருவதை அடுத்து ஐ.பி.எல். போட்டிகள் ஒரு வார காலத்துக்கு நிறுத்திவைக்கப்படுவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஒரு வாரத்துக்கு...**

அந்த அறிவிப்பில், "நடப்பு ஐ.பி.எல். 2025 தொடர் ஒரு வாரத்துக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. இது உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த முடிவு ஐ.பி.எல். நிர்வாகக் குழுவுடன் அதன் பங்குதாரர்கள் நடத்திய முறையான ஆலோசனைக்குப் பின்னரே எடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான உரிமையாளர்களும் வீரர்களின் உணர்வுகள், மற்றும் ஒளிபரப்பாளர்கள், விளம்பரதாரர்கள், ரசிகர்களின் உணர்வுகளை முன்வைத்து இந்த முடிவை பரிந்துரைத்தனர்.

**தேசத்துடன் நிற்கிறது...**

நமது படைகளின் வலிமை மற்றும் தயார்நிலையில் பி.சி.சி.ஐ. முழு நம்பிக்கை வைத்திருக்கும் அதே வேளையில், அனைத்து பங்குதாரர்களின் கூட்டு நலனுக்காகவும் செயல்படுவது விவேகமானது என்று வாரியம் கருதியது. அதன் பேரில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்த முக்கியமான தருணத்தில், பி.சி.சி.ஐ. தேசத்துடன் உறுதியாக நிற்கிறது. இந்திய அரசு, நமது ஆயுதப் படைகள் மற்றும் நாட்டு மக்களுடன் நாங்கள் ஒன்றுபடுவதை வெளிப்படுத்துகிறோம். அண்மையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் பாகிஸ்தானின் அத்துமீறலுக்கு உறுதியான பதிலடி கொடுத்து, ஆபரேஷன் சிந்தூர் மூலம் நாட்டைப் பாதுகாத்துவரும் நமது படைகளின் துணிச்சல் மற்றும் தன்னலமற்ற சேவைக்கு வாரியம் மரியாதையை உரித்தாக்குகிறது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெஸ்ட் கேப்டன் சுப்மன் கில்..?
# பி.சி.சி.ஐ. தீவிர ஆலோசனை

**மும்பை, மே 10-**

இந்திய டெஸ்ட் அணியின் கேப்டன் ஆக சுப்மன் கில்லுக்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவிகின்றன.

**அணியை வழிநடத்த...**

இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்துள்ள நிலையில் புதிய டெஸ்ட் கேப்டனைத் தேர்ந்தெடுப்பதற்கான பொறுப்பு பி.சி.சி.ஐ. தலையில் விழுந்துள்ளது. அஜித் அகர்கர் தலைமையிலான தேர்வுக் குழு அடுத்து வரும் இங்கிலாந்து டெஸ்ட் மட்டுமல்லாமல் நீண்ட காலத்திற்கு அணியை வழிநடத்தக்கூடிய கேப்டனை தேடி வருகிறது. அந்த வகையில் சுப்மன் கில் அடுத்த டெஸ்ட் கேப்டன் ஆக அதிக வாய்ப்புகள் இருப்பதாக பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவிகின்றன. பும்ரா அடிக்கடி காயம் அடைவதால், அவரை தேர்ந்தெடுக்க பி.சி.சி.ஐ. தயக்கம் காட்டுகிறது.

**சுப்மன் கில்...**

இதற்கிடையே நடப்பு ஐ.பி.எல். தொடரில் குஜராத் அணியின் கேப்டனாக சுப்மன் கில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். மேலும் இதுவரை 32 டெஸ்ட் போட்டிகளில் சுப்மன் கில் விளையாடியுள்ளார். எனவே ஜூன் 20 ஆம் தேதி ஹெடிங்லியில் தொடங்கும் ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட இங்கிலாந்து டெஸ்ட் தொடர் முதல் அவரை கேப்டனாக்க பி.சி.சி.ஐ. முனைப்பு காட்டி வருவதாக தெரிகிறது.

## பி.எஸ்.எல். போட்டிகள்:
# பாக். வேண்டுகோளை நிராகரிக்க ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முடிவு..?

**துபாய், மே 10-**

எஞ்சிய பி.எஸ்.எல். போட்டிகளை நடத்த பாகிஸ்தான் விடுத்த வேண்டுகோளை நிராகரிக்க ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

**ஐ.பி.எல். ஒத்திவைப்பு...**

இந்தியா- பாகிஸ்தான் இடையில் போர் பதற்றம் நிலவி வருகிறது. இந்தியாவில் ஐ.பி.எல். தொடர் நடைபெற்று வந்தது. அதேபோல் பாகிஸ்தானில் பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடர் நடைபெற்று வந்தது. இரண்டு தொடர்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். தொடர் ஒரு வாரம் ஒத்தி வைக்கப்படுகிறது. அதன் பின் சூழ்நிலை குறித்து விரிவாக ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

**ஐக்கிய அரபு எமிரேட்சில்....**

அதேவேளையில் பாகிஸ்தான் சூப்பர் லீக் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெறும் என பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு தெரிவித்துள்ளது. போட்டியை நடத்த அனுமதி கேட்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கிரிக்கெட் போர்டுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் வேண்டுகோளை யு.ஏ.இ. நிராகரிக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



**துபாயில் ஐ.பி.எல்...**

பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் போர்டுக்கு எமிரேட்ஸ் கிரிக்கெட் போர்டு எப்போதுமே ஆதரவாக இருந்து வருகிறது. அதேவேளையில் இந்தியாவில் நடைபெறக் கூடிய போட்டிகளுக்கு ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் இந்த போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்தப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற இருந்த ஐ.சி.சி. டி20 உலகக் கோப்பை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்றது. அதேபோல் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரும் அங்கு நடத்தப்பட்டுள்ளது.

**நிராகரிக்க முடிவு...?**

இந்த வருடம் தொடக்கத்தில் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியா விளையாடிய அனைத்து போட்டிகளும் துபாயில் நடைபெற்றன. இதனால் இந்திய கிரிக்கெட் போர்டுக்கும் எமிட்ரேட்ஸ் கிரிக்கெட் போர்டுக்கும் இடையில் நல்ல பிணைப்பு இருந்து வருகிறது. தற்போது இந்தியா- பாகிஸ்தான் இடையிலான போர் பதற்றத்தை முன்னிட்டு பாதுகாப்பு கவலையை கருத்தில் கொண்டு நிராகரிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

# போர் சூழல்: அம்பத்தி ராயுடு கருத்து

இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில், பாகிஸ்தான் நடத்தி வரும் தாக்குதலையடுத்து இந்தியாவும் பதிலடி கொடுத்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு தர்மசாலாவில் நடைபெற்ற ஐபிஎல் போட்டி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. பின்னர் ரசிகர்கள் வெளியேற்றப்பட்டனர். கிரிக்கெட் வீரர்கள், தொழில்நுட்ப குழிவினர்கள் பாதுகாப்பாக விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை சிறப்பு வந்தே பாரத் ரயில் மூலம் டில்லிக்கு பாதுகாப்பாக அழைத்துவர பிசிசிஐ முடிவு செய்துள்ளது.

இந்நிலையில் முன்னாள் வீரர் அம்பத்தி ராயுடு கூறியதாவது: கண்ணுக்குக் கண் என்பது மொத்த உலகத்தையும் குருடாக்கிவிடும். இது கோழைத்தனம் என்பதல்ல, ஞானம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். நீதி நிலைநாட்டப்படும், ஆனால் மனிதாபிமானத்தை இழந்துவிடக்கூடாது. கருணையை நமது இதயத்தில் வைத்தும் நமது நாட்டை தீவிரமாக நேசிக்கலாம். நாட்டுப் பற்றும் அமைதியும் கைகள் பிடித்து நடக்கலாம் எனக் கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## பொதுத் தேர்வு முடிவுகள்:
# நேரடி மறுகூட்டல் விண்ணப்பம் முறை ரத்து

**சென்னை, மே 10-**

10, 11, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளுக்குப் பின் நேரடியாக மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்கும் முறை ரத்து செய்யப்பட்டுள்ளது.

விடைத்தாள் நகல் பெற்ற பிறகு மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பிக்கும் முறை தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடைத்தாள் நகல் பெற்ற பிறகு முடிவெடுக்க சரியாக இருக்கும் என்பதால் இந்த நடவடிக்கையை தேர்வுத் துறை எடுத்துள்ளது.

பிளஸ் 2 பொதுத் தேர்வு மார்ச் 3-ஆம் தேதி தொடங்கி 25-ஆம் தேதி முடிவடைந்தது. தேர்வை 8 லட்சத்து 21 ஆயிரத்து 57 மாணவ, மாணவிகள் எழுதினர். பிளஸ் 2 தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் (மே 8) வெளியிடப்பட்டது. தேர்வு எழுதியவர்களில் 7,53,142 மாணவ, மாணவிகள் (95.03 சதவிகிதம்) தேர்ச்சி பெற்றனர். வழக்கம்போல், மாணவர்களைவிட மாணவிகளே அதிகளவில் தேர்ச்சி பெற்றனர்.

தேர்வு எழுதியதில் 4,05,472 (96.70 சதவிகிதம்) மாணவிகளும், 3,47,670 (93.16 சதவிகிதம்) மாணவர்களும் தேர்ச்சி பெற்றனர். மொத்தம் 26,877 பேர் நூற்றுக்குநூறு மதிப்பெண் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். போட்டியை நடத்தினால்....
# சேப்பாக்கம் மைதானத்திற்கு திடீர் வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, மே 10-**

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது.

இதைத் தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்து போர் பதற்றம் உருவாகியது. எல்லையில் இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கி சண்டை நீடித்து வருகிறது. இதற்கிடையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் காரணமாக நடப்பு ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய போட்டிகள் ஒரு வார காலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஐ.பி.எல். நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சேப்பாக்கம் மைதானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. சேப்பாக்கம் மைதான அலுவலகத்திற்கு பாகிஸ்தான் நாட்டை குறிப்பிட்டு இமெயில் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. அந்த இமெயிலில், "ஆபரேஷன் சிந்தூருக்கு பதிலடியாக ஐ.பி.எல். போட்டி நடத்தினால் தாக்குதல் நடத்தப்படும். ஐ.பி.எல். நடத்தினால் ரத்த ஆறு ஓடும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாய்களுடன் விரைந்து சென்று மைதானம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சோதனை நடத்தி வருகின்றனர். மேலும் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்மநபர் யார்? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நாடு முழுவதும் எரிபொருட்கள் போதுமான அளவு இருப்பு உள்ளது
## நிறுவனங்கள் விளக்கம்

**புதுடெல்லி, மே 10-**

பெட்ரோல், டீசல், எல்.பி.ஜி. ஆகிய எரிபொருட்களை வாங்குவதில் பீதி அடையத் தேவையில்லை என்றும் நாடு முழுவதும் போதுமான எரிபொருள் இருப்பு உள்ளது என்றும் இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியன் ஆயில் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், இந்தியன் ஆயில் நிறுவனம் நாடு முழுவதும் போதுமான எரிபொருள் இருப்புகளைக் கொண்டுள்ளது. பெட்ரோல், டீசல் மற்றும் எல்.பி.ஜி. போதுமான அளவு கிடைப்பதை நாங்கள் உறுதி செய்துள்ளோம். எங்கள் விநியோகச் சங்கிலிகள் சீராக இயங்குகின்றன. மேலும் எரிபொருள் மற்றும் எல்.பி.ஜி. அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களிலும் எளிதாகக் கிடைக்கின்றன.

பீதியுடன் வாங்குவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அமைதியாக இருப்பதன் மூலமும், தேவையற்ற கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதன் மூலமும், விநியோகச் சங்கிலியைத் தடையின்றிப் பராமரிக்க முடியும், அனைவருக்கும் எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்ய முடியும். உங்கள் ஒத்துழைப்பு எங்களுக்கு மிகவும் முக்கியமானது என்று தெரிவித்துள்ளது. இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் தீவிரமடைந்து வருவதால், எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுமோ என்ற அச்சம் தேவையற்றது என்பதை தெரிவிக்கும் நோக்கில் இந்தியன் ஆயில் நிறுவனம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதேபோல், பாரத் பெட்ரோலியம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "நாடு தழுவிய எங்கள் நெட்வொர்க்கில் பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. மற்றும் எல்.பி.ஜி. போதுமான அளவு இருப்பு இருப்பதாக பி.பி.சி.எல். அனைத்து குடிமக்களுக்கும் உறுதியளிக்கிறது. கவலைப்படவோ அல்லது பீதி அடையவோ எந்தக் காரணமும் இல்லை. எங்கள் விநியோகச் சங்கிலி செயல்பாடுகள் வலுவாகவும் திறமையாகவும் இருப்பதாலும் தடையற்ற விநியோகங்களை உறுதி செய்து வருவதாலும் அனைத்து வாடிக்கையாளர்களும் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீரர்களை அழைத்துவர சிறப்பு ரயில்

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், தர்மசாலா திடலில் பஞ்சாப் கிங்ஸ் - டில்லி கேபிடல்ஸ் இடையிலான போட்டி வியாழக்கிழமை இரவு பாதியிலேயே நிறுத்தப்பட்டது. பாகிஸ்தானின் ட்ரோன் தாக்குதல் காரணமாக திடலின் விளக்குகள் அணைக்கப்பட்டு ரசிகர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். இரு அணி வீரர்களையும் திடலில் இருந்து பாதுகாப்பாக ஹோட்டலுக்கு காவலர்கள் அழைத்துச் சென்றனர்.

இந்த நிலையில், தர்மசாலாவில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் டில்லி கேபிடல்ஸ் அணிகளின் வீரர்கள், பயிற்சியாளர்கள், உதவிப் பணியாளர்கள், ஒளிபரப்பு பணியாளர்கள் என மொத்தம் 300-க்கும் அதிகமானோர் ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தற்போதைய சூழலில் இவர்கள் அனைவரையும் விமானம் மூலம் மீட்க முடியாது என்பதால், சிறப்பு வந்தே பாரத் ரயில் மூலம் டில்லிக்கு பாதுகாப்பாக அழைத்துவர பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளது.

# மீண்டும் மும்பை அணியில் ஜெய்ஸ்வால்

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால், உள்ளூர் கிரிக்கெட்டில் மும்பை அணிக்காக விளையாடி வந்தார். இந்நிலையில் திடீரென மும்பை அணியில் இருந்து கோவா அணியில் ஆடுவதற்கு ஒப்புக் கொண்டனர். இவர் விலகுவதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் மும்பை அணியின் மூத்த வீரரான ரகானேவுடன் ஏற்பட்ட மோதல்தான் முக்கிய காரணம் என்று தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், முடிவை மாற்றிய ஜெய்ஸ்வால் மீண்டும் மும்பை அணியில் தொடர விரும்புவதாக தெரிவித்துள்ளார். மும்பை கிரிக்கெட் சங்கம் வழங்கிய தடையில்லா சான்றிதழை திரும்ப பெறுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். மும்பை கிரிக்கெட் சங்கம், பி.சி.சி.ஐ. மற்றும் கோவா கிரிக்கெட் சங்கத்துடன் கலந்தாலோசித்து இது குறித்து முடிவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திருச்சிராப்பள்ளி மாநகர், பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், 236 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டி, அங்கு அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.

# இனிமேல் நம்முடைய பாதை சிங்கப்பாதையாக இருக்கும்
## திருச்சி விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

**திருச்சி, மே 10-**

இனிமேல் நாம் செல்லும் பாதை சிங்கப்பாதையாக இருக்கும். மேலும், நாட்டிலேயே தமிழகம் முதல் மாநிலமாக திகழ்கிறது என்று திருச்சி அரசு விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

திருச்சியில் நடைபெற்ற பல்வேறு அரசு விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது, கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழகத்தில் தி.முக. அரசின் சாததனைகள் பிரமிக்கும் வகையில் உள்ளன. அடுத்த இலக்கை நோக்கி செல்வதால், அனைத்து திட்டங்களையும் விளக்கமுடியவில்லை. தி.மு.க. அரசின் வெற்றிப் பயணம் துவங்கியதே திருச்சியில் இருந்துதான். ஏற்கனவே, இங்கு நடந்த கூட்டத்தில் ஏழு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக கூறினேன். பெரும்பாலானவற்றை நான்கு ஆண்டுகளில் எட்டியிருக்கிறோம்.

பொருளாதாரத்தில் இதுவரை பார்க்காத 9.6 விழுக்காடு வளர்ச்சியை எட்டி, நாட்டிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறோம். எந்த பிரவினரும் விட்டுப் போகாத வகையில் திட்டங்களை நிறைவேற்றி, நாட்டில் உள்ள மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கிறோம். இதை, கடந்த ஆட்சியாளர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தமிழக அரசின் வரிவிதிப்பு உரிமையை கூட விட்டுக்கொடுத்து விட்டனர். நான்கே ஆண்டுகளில் விடியல் ஆட்சியில் நிகழ்த்திய சாதனைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இனிமேல் நாம் செல்லும் பாதை சிங்கப்பாதையாக இருக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். முன்னதாக காஷ்மீரில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

# 24 மணி நேரமும் கடைகள், வணிக நிறுவனங்கள் திறந்திருக்க அனுமதி
## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

**சென்னை, மே 10-**

தமிழகத்தில் கடைகள், வணிக நிறுவனங்கள் 24 மணி நேரமும் திறந்திருக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது:- 42-வது வணிகர் தினத்தையொட்டி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் மதுராந்தகத்தில் கடந்த 5-ம் தேதி நடைபெற்ற மாநாட்டில், பொதுமக்களின் நலன் கருதி கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அனைத்து நாட்களும் 24 மணி நேரமும் திறந்திருக்க அனுமதி அளித்து வழங்கப்பட்ட அரசாணை, வரும் ஜூன் 4-ம் தேதியுடன் முடிவடைவதால் இதனை மேலும், 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து அரசாணை வெளியிடப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

முதல்வர் அறிவிப்பிற்கிணங்க, பொதுமக்களின் நலன் கருதி, 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை பணியமர்த்தியுள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் அனுமதி அளிக்கப்பட்டு, 5-ம் தேதி முதல் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால், அரசாணை (டி) எண்.207, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (கே2) துறை, நாள் 08.05.2025-மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வணிகர்களும், பொதுமக்களும் பயனடைவார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மதவாத பிரச்சினையை ஏற்படுத்த முயற்சி:
# பாக். மீது மத்திய அரசு குற்றச்சாட்டு

**புதுடெல்லி, மே 10-**

மதவாத பிரச்சினையை ஏற்படுத்த பாகிஸ்தான் முயற்சி செய்வதாக மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது.

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை குறித்து மத்திய அரசின் வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி மற்றும் விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

கர்னல் சோபியா குரேஷி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இந்திய ராணுவ நிலைகளை குறிவைத்து தாக்க பாகிஸ்தான் முயற்சித்தது. பாகிஸ்தான் படைகள் இந்திய எல்லைகளில் அதிக அளவில் தாக்குதல் நடத்தி உள்ளது. பயணிகள் பயன்படுத்தும் விமானங்களை பாகிஸ்தான் கேடயமாக பயன்படுத்தியது. 8-ம் தேதி இரவு 300 முதல் 400 டிரோன்கள் பயன்படுத்தி, 36 இந்தியப் பகுதிகளில் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் முயற்சித்தது. அவற்றை இந்தியா வழிமறித்து அழித்தது. சுட்டு வீழ்த்தப்பட்ட டிரோன்கள் மூலம் பல தகவல்களை சேகரித்து வருகிறோம்.

பாகிஸ்தானால் அனுப்பப்பட்ட டிரோன்கள் ஆயுதமின்றி கேமராக்களுடன் வந்தன. சுட்டு வீழ்த்தப்பட்ட டிரோன் விமானங்கள் துருக்கியில் தயாரிக்கப்பட்டவை. எல்லைக்கோடு பகுதியில் பாகிஸ்தான் அத்துமீறல் தொடர்கிறது. கனரக ஆயுதங்களை பயன்படுத்தி ஜம்மு எல்லையில் பாகிஸ்தான் ராணுவம் தாக்கியது. இந்தியாவின் பதிலடி தாக்குதலால் பாகிஸ்தான் ராணுவம் கடும் சேதத்தை சந்தித்துள்ளது. உளவு தகவல்களை சேகரிக்கவே மிகப்பெரிய அளவில் பாகிஸ்தான் ஊடுருவியுள்ளது என்று கூறினார்.

அதனை தொடர்ந்து வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி கூறியதாவது:-

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இந்தியா மீது தாக்குதல் நடத்தியுள்ளது. எல்லையில் பாகிஸ்தான் அத்துமீறி தாக்கியதுடன் தீவிரவாதிகளை ஊடுருவச் செய்தது. வழிபாட்டு தலங்களை தாக்கவில்லை என பாகிஸ்தான் பொய் சொல்கிறது. மதவாத பிரச்சினையை ஏற்படுத்த பாகிஸ்தான் முயற்சிக்கிறது. பூஞ்ச் பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை பாகிஸ்தான் தாக்கியது. இதில் 2 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். குழந்தைகளின் பெற்றோர் காயமடைந்துள்ளனர்.

ஆபரேஷன் சிந்தூர் நிலைமை பற்றி அமெரிக்காவிடம் எடுத்துரைத்தோம். பாகிஸ்தானின் தாக்குதல் திட்டம் இந்தியாவிடம் ஒருபோதும் பலிக்காது. ஒட்டுமொத்த இந்தியாவும் பாகிஸ்தானுக்கு எதிராக ஒன்று திரண்டுள்ளது. அமெரிக்காவிடம் ஆபரேஷன் சிந்தூர் பற்றி எடுத்துரைத்துள்ளோம். பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவுடன் ஆலோசித்து வருகிறோம். பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைக்கு அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட இந்தியாவுக்கு அமெரிக்கா ஆதரவு தருவதாக உறுதி அளித்துள்ளது. பாகிஸ்தான் முயற்சி ஒருபோதும் பலிக்காது. உலக நாடுகளை பாகிஸ்தான் தவறாக வழிநடத்த முயற்சிக்கிறது. பாதுகாப்பு காரணங்களுக்காக கர்தார்பூர் வான் வழித்தடம் அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்படுகிறது. பாகிஸ்தானுக்கு செல்லும் நிதியுதவிகளை நிறுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. சர்வேதச நாணய நிதியத்திடம் பேசப்படும்.

பூஞ்ச் பகுதியில் குருத்வார் ஒன்றை பாகிஸ்தான் தாக்கியது. சீக்கிய வழிபாட்டு தலங்களை இந்தியா தாக்குவதாக பாகிஸ்தான் வதந்தி பரப்புகிறது. நமது நாட்டின் மீது நாமே தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் கூறுவது அப்பட்டமான பொய். பாகிஸ்தான் ராணுவத்தின் செயல் பதற்றத்தை அதிகரிக்கும் வகையில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக முன்னாள் முதல்வரும், சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியின் பிறந்த நாளை முன்னிட்டு, திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளர் டாக்டர் ச.வெங்கடேசன் வேலப்பன்சாவடி அண்ணா தொழிற்சங்க ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினார்.

### சித்திரை திருவிழாவையொட்டி

# அழகர்கோவிலில் இருந்து கள்ளழகரின் குதிரை, கருட, சேஷ வாகனங்கள் மதுரைக்கு புறப்பட்டது



**மேலூர், மே 10-**

மேலூர் அருகே உலகப்பி ரசித்தி பெற்ற மதுரை அழகர் கோவிலில் உள்ள கள்ளழகர் கோவிலில் நடைபெறும் திருவிழாவில் சித்திரை பெருந்திருவிழாவும் ஒன்றா கும். நேற்று அழகர்கோவி லில் இருந்து கள்ளழகரின் குதிரை வாகனம், கருட வாக னம், சேஷ வாகனம் மதுரை நோக்கி புறப்பட்டது.

இந்த திருவிழா நேற்று மாலையில் அழகர் கோவி லில் தொடங்கியது. தொடர்ந்து மேள தாளம் முழங்க தீவட்டி பரிவாரங்க ளுடன் திருக்கல்யாண மண் டபத்தில் சுவாமி எழுந்தருளி னார்.

அங்கு நூபுர கங்கை தீர்த் தத்தால் கள்ளழகர் பெருமா ளுக்கு பட்டர்களின் வேத மந்திரங்களுடன் சிறப்பு பூஜைகளும், தீபாராதனைக ளும் நடந்தது. தொடர்ந்து வந்த வழியாகவே சென்று கோவிலுக்குள் பெருமாள் இருப்பிடம் சேருகின்றார். இன்று 9ந் தேதி மாலையி லும் அதே பரிவாரங்களுடன் சுவாமி புறப்பாடு நடைபெ றும். நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கள்ளழகர் பெருமாள் தங்கப் பல்லக் கில் மதுரை நோக்கி புறப்ப டுகிறார். கள்ளந்தரி, அப்பன் திருப்பதி, உள்ளிட்ட பல் வேறு மண்டபங்களில் சுவாமி எழுந்தருள்வார்.

பின்னர் 11ந் தேதி புதூர் மூன்று மாவடியில எதிர் சேவை நடைபெறும். திருவி ழாவின் முக்கிய நிகழ்வாக12 ந்தேதி திங்கட்கிழமை அதி காலை 5.45 மணிக்கு மேல் 6.05 மணிக்குள் மதுரை வைகை ஆற்றில் தங்க குதிரை வாகனத்தில் கள்ளழ கர் இறங்குகிறார். அப்போது லட்சக்கணக்கான பக்தர்கள் அழகரை தரிசனம்செய்வார் கள். 13-ந் தேதி வண்டியூர் வீர ராகவப் பெருமாள் கோவிலி லிருந்து சேஷ வாகனத்தில் கள்ளழகர் புறப்பாடு, தொடர்ந்து கருட வாகனத் தில் தேனூர் மண்டபத்தில் மண்டூக மகரிஷிக்கு கள்ளழ கர் மோட்சம் கொடுத்தல், அன்றிரவு ராமராயர் மண்ட பத்தில் விடிய விடிய தசாவ தாரம் நடைபெறும். 14-ந் தேதி இரவு சேதுபதி மண்ட பத்தில் பூப்பல்லக்கில் சுவாமி காட்சி தருவார். 15 ந் தேதி பிரியா விடை பெற்று கள்ளழகர் மதுரையிலிருந்து திருமலை நோக்கி புறப் பட்டு செல்கிறார். அன்றிரவு அப்பன் திருப்பதியில் பக்தர் கள் தரிசனம். 16 ந்தேதி, காலை 10 மணிக்கு மேல் 10.25 மணிக்குள் அழகர் கோவிலில் கள்ளழகர் இருப் பிடம் சேருகின்றார். 17ந் தேதி உற்சவ சாற்று முறையு டன் திருவிழா நிறைவு பெறு கிறது.

இதையொட்டிகள்ளழகர் அழகர் கோவிலில் இருந்தும துரை வண்டியூர் வரை சுமார் 36 கி.மீ.தூரம் வரை சென்று வர 494 மண்டபங்கள் தயார் நிலையில் அலங்காரம் செய் யப்பட்டுள்ளன. பக்தர்கள் காணிக்கை செலுத்துவதற்கு வசதியாக மதுரைக்கு சுவாமி யுடன் 39 உண்டியல்கள் சென்று வர தயார் நிலையில், சீல் வைக்கப்பட்டு திருக்கல் யாண மண்டபத்தில் தள்ளு வண்டியில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. நூற்றுக்கு மேற் பட்ட போலீசார் பாதுகாப்பு பணிக்கு வந்துள்ளனர்.

# குட்டூர் முத்தாலம்மன் கோவில் திருவிழா


**நத்தம், மே 10-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டூரில் மந்தை முத்தாலம்மன் கோவில் திருவிழா நடந்தது.

இதில் முதல்நாள் இரவு தீவட்டி பரிவாரங்கள், வான வேடிக்கைகளுடன் முத்தா லம்மன் ஊர்வலமாக மேள தாளம் முழங்க கோவில் முன் உள்ள மந்தைக்கு அழைத்து வரப்பட்டது.

பின்னர் கோவிலுக்குள் சென்ற அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தது.

தொடர்ந்து பக்தர்கள் பால்குடம், அக்கினிசட்டி, மாவிளக்கு, கிடாய்கள் வெட்டி தங்களது நேர்த்திக்க டன்களை செலுத்தினர். பின் னர் நேற்று முன்தினம் மாலை வர்ணக் குடைகளு டன் பக்தர்கள் புடைசூழ அம் மன் பூஞ்சோலை சென்றது. விழாவில் சுற்றுவட்டார பகு திகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு



தரிசனம் செய்தனர். திருவிழா விற்கான ஏற்பாடுகளை குட் டூர் ஊர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



மதுரை வணிகவரித்துறை இணை ஆணையர் அலுவலக வளாகத்தில் புதிய கட்டிடத்திற்கான பூமி பூஜையில் அமைச்சர் மூர்த்தி கலந்து கொண்டார். உடன் கலெக்டர் சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் சித்ரா, எம்.எல்.ஏ.க்கள் வெங்கடேசன், பூமிநாதன் ஆகியோர் உள்ளனர்.

# பூச்சிகளை கட்டுப்படுத்தும் உலர் மீன் பொறி செயல் விளக்கம்



**ஒட்டன்சத்திரம். மே.11**

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் வட்டாரம் காமாட்சிபுரத்தில் பூச்சிகளை கட்டுப்படுத்தும் உலர் மீன் பொறி பற்றிய விளக்க நிகழ்ச்சியானது தோட்டக்கலை உதவி இயக்குநர் .பாண்டியராஜன், ஆர்.வி.எஸ்.பத்மாவதி தோட்டக் கலை கல்லூரியின் இணை பேராசிரியர் வா.புனிதவதி ஆகி யோரின் உதவியுடன் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி ஆர். வி.எஸ் பத்மாவதி தோட்டக்கலை கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் பொ.மு. அபிநயா, சி. அபிநயா ,ப.ஆண்டோ ஜெய பிரியா, சா. அஃப்ரின் பானு, கோ.அனுபி ரபா, ச.தனஸ்ரீ ஆகியோர் கிராமப்புற பணி அனுபவ திட்டத் தின் வாயிலாக கலந்துக்கொண்டு பயிர்களை தாக்கும் பூச்சி களை கட்டுப் படுத்தும்உலர் மீன் பொறிபற்றி விவசாயி சாந் திக்கு செய்து காண்பித்து விளக்கம் அளித்தனர்.

### நல திட்டங்களை துண்டு பிரசுரமாக வழங்க வேண்டும்:

# தி.மு.க. நிர்வாகிகளுக்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் வேண்டுகோள்




**ராமநாதபுரம், மே 10-**

தி,மு,க, ஆட்சியில் தமிழ கத்தில் நிறைவேற்றப்பட்ட மக்கள் நல திட்டங்களை வீடுகள் தோறும் சென்று துண்டு பிரசுரமாக வழங்க வேண்டும் என ராமநாதபுரத் தில் நடைபெற்ற திமுக மாவட்ட நிர்வாகிகள் கூட் டத்தில் அமைச்சர் ராஜகண் ணப்பன் வேண்டுகோள் விடுத்தார். ராமநாதபுரத்தில் திமுக கட்சியின் மாவட்ட அளவிலான செயல் வீரர்கள் கூட்டம் தனியார் மகாலில் நடைபெற்றது.

ராமநாதபுரம் பாரதி நக ரில் தனியார் மஹாலில் நடைபெற்ற திமுக செயல் வீரர்கள் கூட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்டச் செய லாளர் ராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் ஏற்பாட்டில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் பேசும் போது, திராவிட முன் னேற்றக் கழகம் ஒரு மாபெ ரும் இயக்கம் பவள விழா கண்ட இயக்கம். இந்திய துணைக்கண்டத்தில் எந்த ஒரு இயக்கமும் திமுக போல் ஒரு கட்டமைப்பு இல்லை. தொண்டர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம். நீங்கள் எல்லாம் மாவட்டச் செயலாளர்களாகவும் அ மைச்சர்களாகவும்பதவிக்கு வர தொண்டர்களால் அடை யாளம் காட்டப்பட்டவர்கள். மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் கட்சி பொதுக் கூட்டங்கள் சிறப் பாக நடத்த வேண்டும் அதில் மாவட்டச் செயலாளர் கள் அமைச்சர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் பங் கேற்க வேண்டும் என்று எங் களுக்கு திமுக தலைவர் தமி ழக முதலமைச்சர் ஸ்டாலின் கூட்டத்தில் கட்டளையிட்டு கூறினார். அதை தற்போது தங்கள் மத்தியில் கூறுகி றேன். ஒவ்வொரு ஒன்றியத் திலும் பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யுங்கள் அதற்கு சிறப்பு பேச்சாளர்களை பேசுவதற்கு அழையுங்கள். அதற்கான செலவுகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஒன்றியம் தோறும் பொதுக் கூட்டமும் கிராமம் கிராமமாக தினமும் வீடு வீடாக சென்று மக்களி டம் துண்டு பிரசுரங்கள் விநி யோகம் செய்யுங்கள். அத்து டன் கடந்த நான்கு ஆண்டுக ளில் திமுக அரசின் அரிய பல சாதனைகள் செய்து வந் ததையும் மகளிர் திட்டம், நம் மாவட்ட முன்னேற்றத் திற்காக கொண்டுவரப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் மக்களுக்கு எடுத்துக் கூறுங் கள். உங்களுக்கு அனைத்து விதத்திலும் நாங்கள் உறுது ணையாகவும் ஒத்துழைப்பும் தர தயாராக இருக்கிறோம் அனைவரும் கட்சிப் பணி யில் தீவிரமாக பணியாற்றுங் கள் என்று பேசினார்.

கூட்டத்தில் வனத்துறை மற்றும் கதர் துறை அமைச் சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு பேசியதா வது:- தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகள் மேற் கொள்ளப்பட்ட மக்கள் நல திட்டங்களை துண்டு பிரசுர மாக நிர்வாகிகள் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் வழங்கிட வேண்டும். ராமநா தபுரம் மாவட்டத்தில் உள்ள 28 ஒன்றிய கழகம் மற்றும் 6 நகர் கழகத்தில் 34 பொதுக் கூட்டங்கள் நடத்தி மக்கள் நல திட்டங்களை எடுத்துக் கூறி வாக்காளர்களை தயார் செய்திட வேண்டும். தமிழக முதல்வர் கூறியதை போல 200 இடங்களுக்கு மேலாக நாம் வெற்றி பெற்று தமிழக முதல்வரிடம் வெற்றிக்க னியை கொடுக்க வேண்டும். என கேட்டுக்கொண்டார். ராமநாதபுரம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக விமான நிலை யம், வேலைவாய்ப்பு உரு வாக்க தொழிற்பேட்டை உள்ளிட்ட பல்வேறு திட்டங் களை கொண்டு வர அறி விப்பு செய்த தமிழக முதல மைச்சருக்கு நன்றி தெரிவித் தல் உள்ளிட்ட பல்வேறு தீர் மானங்கள் நிறைவேற்றப் பட்டன. கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர், மாநில சுற்றுச்சூ ழல் அணி துணைச் செயலா ளர் அருண், மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் சுதர்சன், விருதுநகர் மாவட்ட மாண வர் அணி அமைப்பாளர் வே ல்முருகன், ராமநாதபுரம் நக ராட்சி சேர்மன் ஆர் கே கார் மேகம், மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே. ஜே. பிரவீன், ராமநாதபுரம் நக ராட்சி துணை சேர்மன் பிரவீ ன் தங்கம், வழக்கறிஞர் ரவி சந்திரராமவன்னி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### டி.கல்லுப்பட்டி, புளியம்பட்டியில்

# தி.மு.க. அரசின் நான்காண்டு சாதனை பொதுக்கூட்டம்: மணிமாறன் பங்கேற்பு




**திருமங்கலம். மே 10-**

டி.கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றியம் புளியம்பட்டியில் தி.மு.க அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் மதுரை தெற்கு மாவட்ட கழகச் செய லாளர் சேடபட்டி மு.மணிமா றன் தலைமையில் நடை பெற்றது.இக் கூட்டத்தில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் பங்கேற்று சிறப் புரையாற்றினார்.

கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞரணி செயலா ளர், தமிழ்நாடு துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க திருமங்க லம் தொகுதி டி.கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றிய கழகம் சார் பில் புளியம்பட்டியில் தி.மு.க அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட் டம் நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத் தில் மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேட பட்டி மு.மணிமாறன் தலைமை வகித்து சிறப்புரையாற்றி னார்.

டி.கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பாண்டியன் வரவேற்று பேசி னார்.

ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இந்த கூட் டத்தில் முன்னாள் மத்திய இணை அமைச்சர், கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் சிறப்பாளராக கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழக அர சின் நான்கு ஆண்டு கால பல் வேறு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் த லைமை கழக பேச்சாளர் எழும்பூர் கோபிநாத், மாவட்ட கழக நிர்வாகிகள் நாகராஜ், லதா அதியமான்,சி வனாண்டி,நகர, பேரூர் கழக செயலாளர்கள் நாகராஜன்,த னசேகரன், இராமமூர்த்தி,ம தன்குமார், முத்துகணேசன்,வ ருசை முகமது, திருமங்கலம் நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலை வர் ஆதவன் அதியமான், ஆதிமூலம், மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், பாண்டி முருகன்,பரமசிவம், மு.முருகன், சாதிக்மொகை தீன் டி.கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் பெரியசாமி, கணேசன்,அமா வாசை, நாகலட்சுமி, மணி கண்டன், ராஜகோபால், ராஜாராம், ஆர்.ராஜாராம், தங் கராணி மற்றும் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# வேளாண் இயந்திரங்கள் கருவிகளின் பராமரிப்பு முகாம்: கலெக்டர் தகவல்

**விருதுநகர், மே 10-**

வேளாண் இயந்திரங்க ளைப் பயன்படுத்தும் விவசா யிகள் பயன்பெறும் வகை யில், வேளாண்மைப் பொறி யியல் துறை மற்றும் தனியார் வேளாண் இயந்திர உற்பத்தி நிறுவனங்களுடன் இ ணைந்து வேளாண் இயந்தி ரங்கள் பராமரிப்பு குறித்தான முகாம் வரும் 14.05.2025 அன்று வேளாண்மைப் பொறியியல் துறை, விபி.எம். எம் கல்லூரி எதிரில், கிருஷ் ணன்கோவில் அலுவலக வளாகத்தில் நடைபெற உள் ளது.

இவ்வேளாண் இயந்திரங் கள், கருவிகளை திறம்பட இயக்குதல் மற்றும் பராமரிக் கும் வழிமுறைகளையும் விவசாயிகள் தெரிந்து கொள் வது அவசியமாகும்.

இம்முகாமில் தனியார் வேளாண் இயந்திரங்கள் மற் றும் கருவிகளின் தயாரிப்பு நிறுவனங்களின் பொறியாளர் களுடனும், அலுவலர்களுட னும் வேளாண் இயந்திர உரி மையாளர்கள்,

விவசாயிகள் நேரில் கலந் துரையாடிட உரிய ஏற்பாடு கள் செய்யப்படும். புதிய மற் றும் நவீன வேளாண் இயந்தி ரங்கள் மற்றும் கருவிகள் ஆகியவை முகாம்களில் காட் சிபடுத்தப்பட்டு அதன் முக்கி யத்துவம்,

பயன்பாடு, பராமரிப்பு குறித்து அவ்வியந்திர உற்பத் தியாளர்கள் மூலம் விவசாயி களுக்கு விளக்கமளிக்கப்ப டும்.

வேளாண் இயந்திரங்கள் மற்றும கருவிகளை இயக்கு தல் மற்றும் பராமரித்தல், செய்யக் கூடியது மற்றும் செய்யக் கூடாதது, பழுதுக ளைக் கண்டறிதல், உதிரிபா கங்கள்,

மசகு எண்ணெய் மற்றும் உயவுப் பொருட்கள் பயன் பாடு குறித்த தெளிவுரை ஆகி யவற்றினை வேளாண் இயந் திர உரிமையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் தெளிவுப டுத்தும் வண்ணம் முகாம்கள் நடத்தப்படும்.

விருதுநகர் மாவட்ட விவ சாயிகள் இம்முகாமில் திர ளாக கலந்து கொண்டு தங்க ளது வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பராமரிக் கும் முறை பற்றி தெரிந்து கொண்டு பயனடைய வேண் டும் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

### ஒட்டன்சத்திரம், ஓடைப்பட்டியில்

# தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்




**ஒட்டன்சத்திரம்,மே.10-**

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி ஒட்டன் சத்திரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் நாடு போற் றும் நான்காண்டு- தொடரட் டும் இது பல்லாண்டு என்ற சாதனை விளக்க பொதுக் கூட்டம் ஒன்றிய செயலாளர் ஜோதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது,

கூட்டத்தில் சிறப்பு பேச் சாளராக தலைமை கழக பேச்சாளர் கவிஞர் பொன். அண்ணாவி அரசின் நான் காண்டு சாதனைகளை எடுத் துரைத்து சிறப்புரையாற்றி னார்,

மேலும் நிகழ்வில் மாவட்ட துணைச் செயலா ளர் ராஜாமணி, ஒன்றிய செய லாளர்கள் ஜோதீஸ்வரன், எஸ். ஆர்.கே. பாலு, ஒன்றிய அவைத் தலைவர் செல்ல முத்து,

ஒன்றிய துணைச் செய லாளர்கள் தமிழ்ச்செல்விரா ஜா, ராமகிருஷ்ணன், பொரு ளாளர் அழகியணன், முன் னாள் ஒன்றிய குழு தலைவர் அய்யம்மாள், தலைமை பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பழனியம்மாள், விஜயலட் சுமி சண்முகசுந்தரம், லட்சுமி ராஜசேகரன், பழனிவேல்,நி றைமதி சந்திரசேகரன், பால சுப்பிரமணி, செல்லமுத்து, சரவணன், சுப்பிரமணி, சிறு பான்மையினர் நல உரிமை பிரிவு நிஜாமுதீன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பிரபு, முரு கன்,ஷாஜகான், இளைஞர் அணி நிர்வாகிகள் சாகுல், அமீது,முகமதுஆரிப் உள் ளிட்ட நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞ ரணி அமைப்பாளர் முருகா னந்தம் நன்றி கூறினார். படம். திண்டுக்கல் மாவட் டம் ஒட்டன்சத்திரம் சட்ட மன்றத் தொகுதி ஓடைபட்டி யில் தமிழக அரசின் நான் காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற் றது.

# வத்தலக்குண்டு அருகே முத்தாலம்மன் கோவில் ரேக்ளா ரேஸ்

**வத்தலக்குண்டு, மே 10-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே அமைந்திருக்கும் ஜீ.தும்மலப் பட்டியில் உள்ள அருள்மிகு முத்தாலம்மன் கோவில் திரு விழாவை முன்னிட்டு, ரேக்ளா பந்தயம் வெகு சிறப் பாக நடைபெற்றது. சுற்றுவட் டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான மக்கள் இந்த பாரம்பரிய விளையாட்டு ரேக்ளா ரேஸில் திரளாக கலந்து கொண்டு உற்சாகமாக கண்டு களித்தனர். திண்டுக் கல், கம்பம், கூடலூர், தேனி, சின்னமனூர், சோழவந்தான், மதுரை, மேலூர், திருமங்க லம், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலி ருந்து வந்திருந்த துடிப்பான இரட்டை மாட்டு வண்டிகள் ரேக்ளா பந்தயத்தில் பங்கேற் றன. பெரிய மாடு, நடுமாடு மற்றும் பூஞ்சிட்டு என மூன்று பிரிவுகளின் கீழ் பந்த யம் நடத்தப்பட்டது. ஒவ் வொரு பிரிவிலும் வண்டிகள் சீறிப்பாய்ந்து சென்றது பார் வையாளர்களை பரவசப்ப டுத்தியது. பெரிய மாட்டு வண்டி பந்தயத்தில் போடி யைச் சேர்ந்த ரித்தன் தேவ் மின்னல் வேகத்தில் தனது மாடுகளை செலுத்தி முதல் பரிசை தட்டிச் சென்றார். கோம்பைப்பட்டியைச்



சேர்ந்த காளிதாஸ் திறமை யாக வண்டி ஓட்டி இரண் டாம் இடத்தையும், அணைப் பட்டியைச் சேர்ந்த விஜயகு மார் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். வெற்றி பெற்ற வீரர்களுக்கும், அவர் களின் காளைகளுக்கும் பார் வையாளர்கள் கைதட்டி ஆர வாரம் செய்து வாழ்த்து தெரி வித்தனர். நடுமாடு பிரிவில் கூடலூரைச் சேர்ந்த வனராஜ் யாரும் நெருங்க முடியாத வேகத்தில் சென்று முதலி டத்தை தனதாக்கினார். அதே ஊரைச் சேர்ந்த வைரவன் இரண்டாம் இடத்தையும், குடந்துரையைச் சேர்ந்த கோகுல் ராஜா மூன்றாம் இடத்தையும் பிடித்தனர். இந்த பிரிவிலும் கடுமை யான போட்டி நிலவியது குறிப்பிடத்தக்கது. ஜீ.தும்ம லப்பட்டி முத்தாலம்மன் கோவில் நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் இணைந்து இந்த இரட்டை மாட்டு வ ண்டி பந்தயத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கோவில் நிர்வாகிகள் அனை வரையும் இந்த ரேக்ளா பந்த யத்திற்கான அனைத்து ஏற்பா டுகளையும் செய்து நடத்தி னார். அவரது அயராத உழை ப்பிற்கு பொதுமக்கள் பாரா ட்டு தெரிவித்தனர். ரேக்ளா பந்தயத்தை முன்னிட்டு நில க்கோட்டை காவல் துறை துணை கண்காணிப்பாளர் செந்தில்குமார் தலைமையில் ஏராளமான போலீசார் பாது காப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். இதனால் எந் தவித அசம்பாவித சம்பவங் களும் இன்றி பந்தயம் அமை தியாக நடந்து முடிந்தது.



திருச்சி பஞ்சப்பூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஜம்மு-காஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் நடந்த தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில் பாகிஸ்தான் ராணுவ குண்டு வீச்சில் இறந்த அப்பாவி மக்களுக்கு அஞ்சலியும், நமது இந்திய ராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவரும் அமைதியாக ஒரு நிமிடம் எழுந்து நின்று வீரவணக்கம் செலுத்தினர்.



திருச்சி பஞ்சப்பூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.1032 கோடியே 15 லட்சம் செலவில் 7,122 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து ரூ.527 கோடியே 63 லட்சம் மதிப்பீட்டிலான 3,597 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி ரூ.856 கோடியே 5 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 1,17,132 பயனாளிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதில் அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் மேயர் மு.அன்பழகன், துணை மேயர் ஜி.திவ்யா, முதன்மைச்செயலாளர் தா.கார்த்திகேயன், கலெக்டர் மா.பிரதீப்குமார், ஆணையர் வே.சரவணன் உள்ளனர்.

# ஜூன் 15-ல் புதிய மினி பேருந்து திட்டம்

சென்னை, மே 10-
புதிய ஒருங்கிணைந்த மினி பேருந்து திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் ஜூன் 15ம் தேதி தொடங்கி வைக்க உள்ளார். தமிழ்நாடு முழுவதும் புதிய ஒருங்கிணைந்த மினி பேருந்து திட்டம் வரும் ஜூன் 15ம் தேதி முதல் அமல்படுத்தப்பட உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 1,842 புதிய மினி பேருந்துகளை இயக்குவதற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி, புதிய ஒருங்கிணைந்த மினி பேருந்து திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.

# தமிழக மாணவர்களை மீட்க...(1-ம் பக்க தொடர்ச்சி)

அம்மாநில நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து தொடர்ந்து பேசி, தமிழக மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் தற்போது விமான சேவைகள் முற்றிலும் முடக்கி வைக்கப்பட்டுள்ள காரணத்தினாலும், அவர்களை சாலை வழியாக பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான சூழ்நிலை இல்லாத காரணத்தினாலும், தற்போதைய நிலைமை சீரானவுடன் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பயின்று வரும் 52 தமிழக மாணவர்களை மீண்டும் தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கல்வி சுற்றுலா சென்ற நான்கு மாணவர்கள் மட்டும் சாலை வழியாக புது டெல்லிக்கு புறப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று (மே 9) இரவு 7.30 மணியளவில் புது டெல்லி தமிழ்நாடு இல்லம் வந்து சேர்வார்கள் என்றும், பின்னர் அவர்கள் இன்று (மே 10ம் தேதி) அன்று அதிகாலை விமானம் மூலம் தமிழகம் அழைத்து வரப்படுவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் மேற்கு எல்லைப்பகுதிகளில் உள்ள தமிழர்களுக்கு தேவையான தகவல்கள், உதவி, மீட்பு மற்றும் தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ள புது டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் 24/7 உதவி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புது தில்லி தமிழ்நாடு இல்ல உதவி எண்களிலும், மேலும், பாதிக்கப்பட்ட தமிழர்களின் குடும்ப உறுப்பினர்கள், தங்களுக்கு உதவி தேவைப்படும் நிலையில், தமிழக அரசின் 24/7 உதவி எண்களான, 1800 309 3793 (இந்தியாவிற்குள்), +91 80 6900 9900 (வெளிநாடு), + 91 80 6900 9901 (தொடர்புக்கு) தொடர்புகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோவில் அருகில் ரூ.3.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 குடியிருப்புகள் கொண்ட புதிய கட்டிடத்தினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தயாநிதிமாறன் எம்.பி., நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, கூடுதல் தலைமைச்செயலாளர் க.மணிவாசன் ஆகியோர் உள்ளனர்.

# ராயப்பேட்டையில் பல்நோக்கு மையம்

## துணை முதல்வர் உதயநிதி அடிக்கல்

சென்னை, மே 10-
ராயப்பேட்டையில் கட்டப்படும் பல்நோக்கு மையத்துக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். புதிதாக கட்டப்பட்ட குடியிருப்புகளை பயனாளிகளிடம் ஒப்படைத்தார்.

ராயப்பேட்டை பைகிராப்ட் சாலையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் ரூ.12.37 கோடி மதிப்பீட்டில் 3 தளத்தில் பல்நோக்கு மையம் கட்டப்படுகிறது.

அதே போல் திருவல்லிக்கேணி ஜானிபாட்ஷா தெருவில் ரூ.1.87 கோடி மதிப்பில் முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம், பாரதி சாலையில் ரூ.1.37 கோடி செலவில் முதல்வர் படைப்பகம் கட்டும் பணிகளுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

# பிளஸ்-2 துணைத்தேர்வுக்கு கால அட்டவணை வெளியீடு

சென்னை, மே 10-
பிளஸ் 2 பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு 25.6.2025 முதல் துணைத்தேர்வு நடத்தப்படும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவித்தார்.

இந்நிலையில், துணைத்தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் மூலமாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் ஜூன் 25 ஆம் தேதி மொழிப் பாடத் தேர்வுகள் நடைபெறுகின்றன.

ஜூன் 26 ஆம் தேதி ஆங்கில பாடத் தேர்வும், ஜூன் 28 ஆம் தேதி முதல் இதரப்பாடங்களுக்கான தேர்வுகளும் நடைபெறவுள்ளன.

பிளஸ் 2 தேர்வு முடிவுகள் நேற்றுமுன்தினம் (மே 8) வெளியிடப்பட்டது.

தேர்வு எழுதியவர்களில் 7,53,142 மாணவ, மாணவிகள் (95.03 சதவிகிதம்) தேர்ச்சி பெற்றனர். வழக்கம்போல், மாணவர்களைவிட மாணவிகளே அதிகளவில் தேர்ச்சி பெற்றனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, கிருஷ்ணகிரி ஜீனூர் கிராமத்தை சேர்ந்த 17 வயது சிறுவன் கீர்த்திவர்மா சிறுவயதில் மின்சாரம் தாக்கி தனது 2 கைகளுமின்றி தற்போது 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 471 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்கிறார். அச்சிறுவனுக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய சிறப்பு மருத்துவ குழுவை வரவைத்து சிகிச்சை வழங்க அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாடு செய்துள்ளார். உடன் டாக்டர்கள் கோபாலகிருஷ்ணன், மகேஷ், ரமேஷ்குமார், நெல்லையப்பர், கார்த்திக், வேலுச்சாமி, மோகன்குமார், பிரியதர்ஷினி ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை எழும்பூர் தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழும அலுவலக கூட்டரங்கில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் சி.எம்.டி.ஏ. சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்தும், திட்டங்களை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச்செயலாளர் காகர்லா உஷா, பெருநகர் வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் சு.பிரபாகர், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன்குமார், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் கூடலூர் மார்னிங் ஸ்டார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கோடை விழாவின் ஒரு அங்கமாக நடைபெற்ற 11-வது வாசனை பொருட்கள் கண்காட்சியினை தமிழ் வளர்ச்சி, செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# மதுரை மீனாட்சியம்மன் கோவில் திருத்தேரோட்டம் கோலாகலம்

## பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

மதுரை, மே 10-
மதுரை மீனாட்சியம்மன் சித்திரை திருவிழாவின் திருக்கல்யாணத்தை தொடர்ந்து 11-ம் நாள் நிகழ்வாகத் திருத்தேரோட்டம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஹர ஹர சிவா என்ற பக்தி முழக்கம் விண்ணை பிளக்கும் வகையில் திருத்தேரினை வடம் பிடித்து இழுத்தனர்.

உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் சித்திரைத் திருவிழா கடந்த ஏப்ரல் 29 ஆம் தேதி கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது. விழாவை முன்னிட்டு தினமும் காலை, மாலை வேளைகளில் சுவாமி அம்மன் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்தனர். விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளான மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம், திக் விஜயம் நடைபெற்று முடிவடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் சித்திரைத் திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான மீனாட்சி - சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து விழாவின் முத்தாய்ப்பாக நேற்று காலை திருத்தேரோட்டம் வெகு விமர்சையாக தொடங்கியது. திருத்தேரோட்டத்தை முன்னிட்டு அதிகாலையில் கீழமாசி வீதியில் உள்ள தேரடி பகுதிக்கு மீனாட்சி அம்மனும், சுந்தரேசுவரர் பிரியாவிடை சமேதராக கோவிலிலிருந்து அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அழைத்து வரப்பட்டு அம்மனுக்கும் சுவாமிக்கும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்டமான பெரிய தேரில் சுந்தரேஸ்வர் பிரியாவிடை சமேதராகவும், சிறப்பு அலங்காரத்திலும், மீனாட்சியம்மன் சிறிய தேரிலும் சிறப்பு அலங்காரத்திலும் எழுந்தருளினர்.



தேரோட்டம் தொடங்கும் முன் அங்குள்ள கருப்பணசுவாமி கோவிலில் சிறப்புப் பூஜைகள் நடத்தப்பட்டு அதனை தொடர்ந்து பெரிய தேர் புறப்பாடாகி அதைத் தொடர்ந்து சிறிய தேரும் புறப்பாடானது. சுவாமி அம்மன் திருத்தேருக்கு முன்பாக அலங்கரிக்கப்பட்ட யானை முன்னே செல்லும்போது அவற்றை தொடர்ந்து முதலில் விநாயகரும் இரண்டாவதாக முருகப்பெருமானும், தொடர்ந்து நாயன்மார்களும் அமர்ந்திருந்த சப்பரங்கள் செல்லும். சுவாமி, அம்மனின் திருத்தேரானது மதுரை நகர வீதிகளான கீழமாசி வீதி, தெற்கு மாசி வீதி, மேலமாசி வீதி, வடக்குமாசி வீதிகளில் வலம் வந்து பின்னர் கீழமாசி வீதியில் உள்ள தேரடியை வந்து அடையவுள்ளது.

மாசி வீதிகளிள் ஆடி அசைந்து வந்த மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருத்தேரின் முன்பாக ஏராளமான சிவ பக்தர்கள் கைலாய வாத்தியங்களை முழங்கியபடியும், பல்வேறு இசைகளை இசைத்தபடியும் மீனாட்சி- சுந்தரேசுவரர் பதிகம் பாடியபடியும், ஹர ஹர சிவா என பக்தி முழக்கம் விண்ணைப்பிளக்கப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து சென்று சாமி தரிசனம் செய்கின்றனர். திருவிழாவினை காண மதுரை, சுற்று வட்டாரங்களிலிருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதால் காவல்துறை சார்பில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.